பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 11 புதன்கிழமை (23.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :89

### அரசு மீது குற்றச்சாட்டு

# புலிகள் மீது மறைமுகப் போர்!

## இப்போக்கு நீடித்தால் நிலைமை விபரீதமாகும் யுத்தநிறுத்தம் முறியும் என்றும் எச்சரிக்கை



கிளிநொச்சி,பெப்ரவரி 23

**இலங்கையில் புதிய அரசு பதவியேற்ற பின்னர் அதன் படைத்தரப்பு புதிய, புதிய ஆயுதக் குழுக்களை உருவாக்கி, படைத்தரப்பும் அவர்களோடு இணைந்து, விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும், தேசப் பற்றாளர்கள் மீதும், தமிழ் மக்கள் மீதும் ஒரு மறைமுக யுத்தத்தைத் தொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதுதான் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை. இப்போக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல், இந்நிலைமை தொடருமானால், அமைதிச் சூழல் - சமாதான நிலைமை - யுத்தநிறுத்த ஏற்பாடு - எல்லாமே தகர்த்தெறியப்பட்டுவிடும். இந்த ஆபத்து ஏது நிலையை நோர்வே அனுசரணையாளர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளோம்.**

**- இவ்வாறு முன்னெச்சரிக்கை அறிவிப்பு விடுத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

நேற்றுக்காலை கிளிநொச்சியில் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10.10 மணியளவில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நோர்வே அனுசரணையாளர் குழுவின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், சொல்ஹெய்மின் மகன் ஆகியோர் ஹெலியில் வந்திறங்கினர்.

அவர்களைச் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றுச் சமாதானச் செயலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு பேச்சுக்கள் காலை 10.45 மணிக்கு ஆரம்பமாகி 12.30 வரை இடம்பெற்றன. இப்பேச்சில் தமிழ்ச்செல்வனுடன் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பங்குபற்றினர்.

இப் பேச்சுக்கள் முடிவடைந்ததும் சொல்ஹெய்ம் வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலைப் பாதிப்புகளைப் பார்வையிடச் சென்றார்.

நோர்வேத் தூதுவருடன் (16ஆம் பக்கம் பார்க்க)

# பேசுவதற்கு அரசு தயாராம்!

கொழும்பு.பெப்.23

வடக்கு-கிழக்கு மக்களுக்கான அவசர மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான இடைக்கால அதிகாரசபை குறித்தும் இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு குறித்தும் பேசுவதற்கு அரசு தயாராகவுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கை அரசு. போர்நிறுத்த உடன்படிக்கையின் மூன்றாம் ஆண்டு நிறைவு தினத்தையொட்டி நேற்று அரசு சார்பில் அரச ஊடகத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்து இன்றுடன் மூன்றாண்டுகள் நிறைவுறுகின்றன.

தொடர்ந்து பாரிய அளவிலான யுத்தம் ஒன்று இல்லாத நிலையில் பல பெறுமதிமிக்க உயிர்கள் காக்கப்பட்டு, பரவலான அழிவுகள் தடுக்கப்பட்டுள்ளன. அதுகுறித்துத் திருப்தியைத் தெரிவிக்கும் அதேவேளையில், தான் சகல முன்னெடுப்புக்களை மேற்கொண்ட போதிலும், பேச்சுக் (16ஆம் பக்கம் பார்க்க)

## 6 கைதிகள் சரணடைந்தனர்!

எம்பிலிப்பிட்டிய நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து, தப்பியோடிய சிறைக்கைதிகளில் 6 பேர் நீதி மன்றில் சரணடைந்துள்ளனர் மற்றுமொரு சந்தேக நபரை கொட்டிகல பிரதேசத்தில் வைத்து பொலீஸார் கைது செய்தனர் என இரத்தினபுரி பொலீஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானில் 600 பேர் சாவு: பெரும் நிலநடுக்கத்தால்!

ஈரானில் நேற்று பெரும் நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

ஈரானின் கெர்மன் மாகாணத்தின் அருகே நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தில் சுமார் 600 பேருக்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்று நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேற்றைய பிந்திய நிலைவரங்களின் படி இந்தத்தொகை ஆயிரத்தை எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று நேற்று நள்ளிரவு தெரிவித்தது. (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)(த-190)

## மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை சர்வதேச சமூகமும் வலியுறுத்துகிறது

### கிளிநொச்சியில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கிளிநொச்சி.பெப்.23

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதற்காக பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை சர்வதேச சமூகமும் வலியுறுத்துகின்றது. எனினும் கட்டமைப்புக்கான இறுதி உடன்பாட்டுக்கு வரவேண்டிய பொறுப்பு அரசிடமும் விடுதலைப் புலிகளிடமே இருக்கின்றது.

இப்படிக் கூறினார் நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்று நடத்திய பேச்சை அடுத்து செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானத்துக்கான கட்டமைப்பின் அவசியத்தை கொழும்பு வந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் புஷ், கிளிங்டன் மற்றும்ஜேர்மன் அமைச்சர் உட்பட்பனர் வலியுறுத்தியுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



சுனாமியால் பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பகுதிக்கு நேற்று விஜயம்செய்த ஜேர்மன் நாட்டு அமைச்சர் திருமதி வியெஸ்ஸோ றெக்சியாஸிடம் அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தேம்பி அழுதவாறு தமது கண்ணீர்க் கதையை விவரித்த காட்சி....

(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

## மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்த சில தரப்புகள் தீவிர முயற்சி

### ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு.பெப்.23

நாட்டில் யுத்தம் நின்று மூன்றாண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் இப்போது யுத்தநிறுத்த உடன்பாடு ஆபத்தான கட்டத்தில் சிக்கிக்கொண்டுள்ளது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. வேறு உள்நோக்கம் கொண்ட தரப்புகள் யுத்தத்துக்குப் போகவே விரும்புகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி அவர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மூன்று வருடங்களுக்கு முன்னர், 2002 பெப்ரவரியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு நாம் ஒப்பமிட்ட புரிந்துணர்வு உடன்பாடு மோதல்களை முடிவுக்குக்கொண்டு வந்தது. அடுத்த கட்டமாக அமைதிப்பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஜனவரி 2004இல், அப்போதைய தேக்க நிலையைத் தகர்த்து பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு எல்லாம் தயார் நிலையில் இருந்தன.

ஆனால், துரதிஷ்டவசமாக நாம் விட்ட இடத்திலிருந்து அமைதிப் பேச்சை அரசு இன்னும் (16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



மணற்காட்டுப் பகுதிக்கு நேற்று விஜயம் செய்த ஜேர்மன் நாட்டு அமைச்சர் திருமதி வியெஸ்ஸா றெக்கியால் மற்றும் அவருடன் வருகைதந்த இலங்கைக்கான ஜேர்மன் தூதர் ஜேர்ஹென்வீர்த் ஆகியோரை மக்கள் மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படங்களிலும் காணலாம்.

அங்கு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஜேர்மன் பிரதிநிதிகளுடன் யாழ்.ஆயர் அருட் திரு. தோமஸ சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் ஆகியோரும் அகவணக்கம் செலுத் துவதை இரண்டாவது படத்திலும் பாதிக்கப்பட்டோருக்கு அமைச்சர் உதவிப பொருள்களைக் கையளிப்பதை அடுத்த படத்திலும் காணலாம்.

*(படங்கள்- சி.சுந்தரலிங்கம், கர வெட்டிச் செய்தியாளர்)*

# பொதுக்கட்டமைப்பு உருவாகாதது புலிகள் தரப்பில் பெரும் ஏமாற்றம்

## நோர்வேயிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.23

சுனாமி பேரலை அனர்த்தத்தில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விவகாரத்தில் விடுதலைப் புலிகள் தரப்பு பெரும் ஏமாற்றமடைந்திருக்கிறது.

நேற்றுக் கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்மிடம் தமது ஏமாற்றத்தை வெளியிட்டார சு.ப.தமிழ்ச்செல்வன்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

★ *கேள்வி:* ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக முன்னேற்றம் ஏதும் உண்டா?

✪ *பதில்:* கட்டமைப்பு உருவாக்காததால் ஏற்பட்டுள்ள எமது ஏமாற்றத்தை நாம் நோர்வேயிடம் தெரிவித்துள்ளோம்.

ஒன்றரை மாதம் கடந்த நிலையில் எமது மக்களுக்கு சர்வதேச உதவிகளைக் கொண்டு வர முடியாத நிலைதான் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கின்றது.பாதிக்கப்பட்டு பெரும் மனிதாபிமான நெருக்கடியில் உள்ள மக்களுக்கு விரக்தி ஏற்பட்டுள்ளது. இதற்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டும்.

அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேயும் மற்றும் சர்வதேச சமூகமும் இதில் அதிக அக்கறை எடுக்கவேண்டும் என்று எடுத்துக கூறினோம். இதில் கூடுதல் கரிசனை எடுப்பதாக நோர்வேத் தரப்பு எமக்கு உறுதி அளித்துள்ளது.

★ *கேள்வி:* மலைநாட்டுக்கு வரும்படி சந்திரசேகரன் உங்களை அழைத்துள்ளாரா?

✪ *பதில்:* அப்படி எந்தச் செய்தியும் எமக்கு வரவில்லை.புதுச் செய்தி ஒன்றைச் சொல்கிறீர்கள். இனித்தான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும் அதிகார பூர்வமாக இது பற்றிய எந்தச் செய்தியும் எமக்குக் கிடைக்கவில்லை.

★ *கேள்வி:* ஐரோப்பிய நாடுகளுக்கு நீங்கள் போகிறீர்கள் என வெளிவரும் செய்தி குறித்து..?

✪ பதில்: விரைவில் நாங்கள் சர்வதேச சமூகத்துடன் உரையாடவேண்டிய தேவை இருக்கிறது. எமது மக்களின் மனிதாபிமானத் தேவைகள், மனிதாபிமானப் பிரச்சினைகள், இங்குள்ள சூழ்நிலைகள் ஆகியன தொடர்பாகவும் குறிப்பாக பேச வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகளை இங்கு பெற்றுக்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபடவிருக்கின்றோம். அதற்கான திட்டம் எம்மிடம் இருக்கிறது - என்றார். (ஐ-3)

## சாவகச்சேரி பாடசாலையொன்றில்

# அதிபரும் உப அதிபரும் இணைந்து ஆசிரியரைத் தாக்கியதாக முறைப்பாடு

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரை அதிபரும் உப அதிபரும் சேர்ந்து மூர்க்கத்தனமாகத் தாக்கியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. புகன் ஸ்ரீந்திரன் என்ற ஆசிரியரே தாக்கப்பட்டவராவார்.

கடந்த வருடம் தனக்கு முறையற்ற விதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து அவரின் இடமாற்றம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் ரத்துச்செய்யப்பட்டு, முன்னர் கடமையாற்றிய பாடசாலையிலேயே கடமையாற்றுமாறு அனுமதிக்கடிதமும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனையடுத்து, கடந்த 17 ஆம் திகதி காலை தனது கடமையை ஏற்பதற்காக தான் குறிப்பிட்ட பாடசாலைக்குச் சென்று அதிபரின் அலுவலகத்தில் உள்ள ஆசிரியர் பதிவேட்டில் கையொப்பமிட முற்பட்டவேளை, அங்கு வந்த அதிபரும் உப அதிபரும் தன்னை அலுவலகத்துக்குள் பூட்டி வைத்து அங்கிருந்த விக்கெட்டினால் மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள் என அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இதனால் அவர் காலிலும் உடம்பிலும் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்[illegible]ள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என அதன் இணைப்பாளர் ருவான் சந்திரசேகரா தெரிவித்தார். (8-7-12)

# சுனாமி அனர்த்த அழிவுகளைப் பார்க்க ஜேர்மன் அமைச்சர் மணற்காடு விஜயம்

## கடற்றொழில் உபகரணங்களை வழங்கினார்

கரவெட்டி,பெப்.23

ஜேர்மன் நாட்டின் பொருளாதார வளர்ச்சித் துறை அமைச்சர் திருமதி வியெஸ்ஸோ றெக்சியாஸ் தலைமையில் அந்த நாட்டின் பிரமுகர்கள் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மணற்காட்டுக் கிராமத்துக்குச் சென்று அழிவுகளை அவர்கள் பார்வையிட்டனர்.

சுனாமியால் கடற்றொழில் உபகரணங்களை இழந்த குடும்பங்களில் 14 பேருக்கு பிளாஸ்ரிக் படகுகள், இழுவை இயந்திரங்கள், வலைகள், தூண்டல்கள், கயிறு போன்ற உபகரணங்களையும் ஒரு தொகைப் பணத்தையும் ஜேர்மன் அமைச்சர் வழங்கினர்.

ஏனையோருக்கும் விரைவில் கடற்றொழில் உபகரணங்களை வழங்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அழிவுகளைப் பார்வையிட்டதும் ஜேர்மன் குழுவினர் முற்பகல் 11.30 மணியளவில் மணற்காடு புனித அந்தோனியார் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட பந்தலில் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

மணற்காடு கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் சாமிநாதன் - அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை சுனாமி அனர்த்த கூட்டுச்செயலணியின் பணிப்பாளர் எஸ்.பாலையா, கடற்புலிகளின் பொறுப்பாளர் அன்பழகன், அனர்த்த உதவிப் பணிமனையைச் சேர்ந்த சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

ஜேர்மன் அமைச்சர் அங்கு உரையாற்றினார். பாதிக்கப்பட்டோருக்கு அவர் தொழில் உபகரணங்களை வழங்கினார். மக்கள் பலர் தமது சோகங்களை கண்ணீர் மல்கியவாறு அமைச்சரிடம் கூறினர். இவற்றை கேட்டு தானும் கண்கலங்கிய ஜேர்மன் அமைச்சர் வியெஸ் றெக்சியாஸ் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்காக தமது நாட்டு அரசு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்று உறுதியளித்தார். (த-70)

# கல்வி நிர்வாக சேவைப்பட்டதாரிகளுக்கு ஜனவரிமாதக் கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.23

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் கல்விநிர்வாக சேவைப் பகுதிகளுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகளை அரச[illegible]றையில் இணைத்துகொள்ளும் திட்டத்தின்கீழ் மூன்று மாதப் பயிசியை நிறைவுசெய்துகொண்ட 250பேர் யாழ். மாவட்டத்தில் கல்விநிர்வாக சேவை பணிகளுக்கான பயிற்சியை[illegible]றுவதற்காக கல்வித் திணைக்களங்கள் [illegible] பாடசாலைகளில் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். இவர்களுக்கான ஜனவரிமாதக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

கல்வித்துறை தவிர்ந்த ஏனைய துறைகளில் நிர்வாகசேவைப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டவர்களுக்கு ஜனவரிமாதக் கொடுப்பனவு வழங்கப்பட்டுவிட்ட போதிலும் கல்விநிர்வாக சேவையாளர்களுக்கு மட்டும் இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படாமை குறித்து அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த)

# ஜேர்மன் அமைச்சர் குழுவினர் டிறிபேர்க் கல்லூரிக்கும் விஜயம்

சாவகச்சேரி,பெப்.23

ஜேர்மன் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மற்றும் அவருடன் வந்த குழுவினர் நேற்றுப்பிற்பகல் சாவகச்சேரிக்கும் விஜயம் செய்தனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் இவர்கள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு விஜயம் செய்தனர்.

பாடசாலையில் ஜேர்மன் அரசின் உதவியுடன் சுமார் 36 மில்லியன் ரூபா செலவில் நடைபெற்றுமுடிந்த - நடைபெற்று வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

பின்னர் அங்கு பாடசாலை அதிபர் மு. நாகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இக் கூட்டத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.சிறீனிவாசன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உட்படப்பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஜேர்மன் நாட்டு அமைச்சர் திருமதி வியெஸ்ஸோ றெக்சியால், பிரதேச செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோா உரை நிகழ்த்தினர். இக்குழுவினருக்குப் பொலீஸார் பாதுகாப்பு வழங்கினர்.(த-31)



நேற்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட ஜேர்மன் நாட்டு அமைச்சர் திருமதி வியெஸ்ஸோ றெக்சியலை பாடசாலை அலுவலக முன்றிலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் அருகில் ஜேர்மனிய அதிகாரி ஒருவர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: சாவகச்சேரிச் செய்தியாளர்)*

## உதயன் ஊடக அனுசரணையுடன்

# 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடகம் இன்று பல்கலை அரங்கில்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபவிருத்தித் திட்டப்பிரிவின் ஏற்பாட்டில் செயற்றிறன் அரங்கத்தின் தயாரிப்பில் உருவான தே.தேவானந்தின் 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' எனற நாடகம் இன்று புதன் கிழமை காலை 10.30, மாலை 3.30 என இரு தடவைகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படுகின்றது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான நிதியைத் திரட்டுவதற்காக இந்த நாடகம் மேடையேற்றப்படுகிறது.

காலை10.30 மணிக்கு இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கினை உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன செயலாளர் எம்.தியாகராஜா ஆகியோர் ஏற்றிவைப்பர்.

தொடர்ந்து தலைமை உரையினை யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறைத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதனும் சிறப்பு விருந்தினர் உரையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாசும் ஆற்றவுள்ளனர்.

முற்பகல் 11 மணியளவில் நாடகம் ஆரம்பமாகும். பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் மங்கள விளக்கினை பேராசிரியர் ப.சிவநாதன் யாழ். நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி மா.பூமகள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திட்ட முகாமையாளர் தே.தேவானந்த் ஆகியோர் ஏற்றவுள்ளனர்.

தொடர்ந்து தலைமை உரையினை பேராசிரியர் ப.சிவநாதனும் சிறப்புவிருந்தினர் உரையினை யாழ். நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி மா. பூமகளும் ஆற்றவுள்ளனர். மாலை 4 மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். இந்த நிகழ்வுகளுக்கு ஊடக அனுசரணையை 'உதயன்' பத்திரிகை வழங்குகிறது. (த-12)

# ஈரானில் நிலநடுக்கம்; 400 பேர் பலி!



நிலநடுக்கத்தால் சிதைந்துபோன ஈரானின் குடியிருப்பு பகுதிகளின் காட்சி இது...

தெஹ்ரான்,பெப்.23

ஈரானில் நேற்று அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. இதில் 400 பேர் உயிரிழந்தனர்; 100 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். மேலும் பல கிராமங்கள் முற்றாகச் சேதமடைந்தன என்று அரச தொலைக் காட்சி அறிவித்தது.

தலைநகர் தெஹ்றானுக்கு தென் கிழக்கே சுமார் 740 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கெர்மன் மாகாணத்தின் அருகே செராண்ட் நகருக்கு அண்மையில் நேற்று அதிகாலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 5.55 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.4 புள்ளி அளவாகப் பதிவானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலநடுக்கம் காரணமாகப் பல கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் மொஹமட் அலி கரிமி கூறினார். ஆனால், ஈரானிய உள்துறை அமைச்சின் பேச்சாளர் சேதங்கள் குறித்து அமர்த்தி வாசித்தார்.

நிலநடுக்கம் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் ஏற்பட்டுள்ளதால் உயிரிழப்பு குறைவாகவே இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்புப்பணிகளில் பொலீஸ், இராணுவ படையினர் ஈடுபட்டுள்ளனர், மீட்புப்பணிக்காகக் ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கையாக வாயுக் குழாய்கள் மூடப்பட்டுள்ளன. மேலும் சேறுபடிந்த பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் வகுப்பறைகள் வெளியே அமைக்கப்பட்டு கற்றல் நடவடிக்கைகள் தொடர்கின்றன என ஈரானின் நிருபர் தெஹ்ரானிலிருந்து கூறினார்.

இதற்கு முன்னர் 2003 ஆம் ஆண்டில் ஈரானின் வரலாற்றுப் புகழ் மிக்க பாம் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 26 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். தற்போது நிகழ்ந்துள்ள நிலநடுக்கம் பாம் நகரிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் வடமேற்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது. ஈரானில் தினமும் சிறியளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# மத்திய கிழக்கில் ஜனநாயகத்தை விஸ்தரிக்க முயற்சிசெய்ய வேண்டும்

## ஐரோப்பிய நாடுகளிடம் புஷ் கோரிக்கை

லண்டன்,பெப்.23

ஈராக் யுத்தத்தால் விளைந்த பிளவுகளை மறந்து, மத்திய கிழக்கில் ஜனநாயகத்தை விஸ்தரிக்க முயற்சிசெய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஐரோப்பிய நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த கால கசப்புணர்வுகளை மறப்பதற்காக மேற்கொள்ளும் ஐந்து நாள்கள் ஐரோப்பிய விஜயத்தின் முதல்நாளன்று ஜோர்ஜ் புஷ் பெல்ஜியத் தலைநகரில் உரையாற்றினார்.

தமது முதலாவது பதவிக்காலத்தில் தனித்துத் தீர்மானம் எடுத்ததால் மேற்கொண்ட பிரச்சினைகளை முடிவுக்குக்கொண்டுவர உதவுமாறு அமெரிக்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சிரியா, லெபனான் மீதான ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் புஷ் வலியுறுத்தினார்.

ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பலமான நட்புறவு உலகெங்கிலும் அமைதி மற்றும் சுபீட்சத்திற்கு மிகவும் அவசியமானது என்றும், தாம் உடனடியாகக் கையாள வேண்டிய பிரச்சினையாக மத்திய கிழக்குப் பிரச்சினையே உள்ளது என்றும் ஈராக் தொடர்பான கடந்த கால முரண்பாடுகள் ஒத்திவைக்கப்படவேண்டும் என்றும் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார். (8)

# வெள்ளை மாளிகைக்குள் நுழைய சாள்ஸ் - கமீலா ஜோடிக்குத் தடை!

லண்டன்,பெப்.23



இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ திருமணத்திற்குப் பிறகு புது மனைவி கமீலாவுடன் அமெரிக்கா செல்லவிருக்கிறார். கமீலா விவாகரத்துச் செய்தவர் என்பதால் அவ் வெள்ளை மாளிகைக்குள் நுழைய ஜனாதிபதி புஷ் தடைவிதித்திருக்கிறார்.

திருமணத்திற்குப் பிறகு முதல் முறையாக இளவரசர் புது மனைவியுடன் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்யத்திட்டமிட்டு இருக்கிறார். சாள்ஸ் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்வது கடந்த 3 ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டது.

அமெரிக்கா செல்லும் சாள்ஸை வரவேற்று வெள்ளை மாளிகையில் விருந்துகொடுக்கவும் புஷ் திட்டமிட்டிருந்தார்.

இந்த நிலையில்தான், சாள்ஸ் - கமீலா திருமணம் முடிவானது.

திருமணத்திற்குப்பிறகு மனைவியையும் அழைத்துக் கொண்டு அமெரிக்கா செல்ல சாள்ஸ் விரும்பினார்.

ஜனாதிபதி புஷ் கிறிஸ்தவ மத நம்பிக்கையில் ஆழ்ந்த பிடிப்பு உள்ளவர். வலதுசாரி எண்ணம் கொண்டவர். அவரால் கருக்கலைப்பு, விவாகரத்து ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. விவாகரத்துச் செய்த கமீலாவை வரவேற்று வெள்ளை மாளிகையில விருந்து அளிப்பது பொருத்தமற்றது என்று புஷ தன் உதவியாள்களிடம் கூறினார்.

புஷ்ஷின் இந்த முடிவு இங்கிலாந்துக்குத் தெரிவிக்கப்பட்டது. இது சாள்ஸ் கமீலா ஜோடிக்கு வருத்தத்தை அளித்துள்ளது. அதனால் சாள்ஸ் அமெரிக்கப் பயணத்தை மேற்கொள்வாரா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

# காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு; உயிரிழப்பு 100 ஆக அதிகரிப்பு!

காஷ்மீர்,பெப்.23

காஷ்மீரில் கடும் பனிப்பொழிவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நூறாக அதிகரித்துள்ளது. அத்துடன், 30 இற்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சில தினங்களாக காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது: இதனால் அப்பிராந்தியத்தில் இயல்புநிலை - வழமைநிலை - முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

காஷ்மீரின் சித்னா எனும் கிராமத்தில் 70 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் இமயமலைப் பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதிக்கான போக்குவரத்து, மின்சாரம், தொலைத் தொடர்புகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளன.

வீதிகளில் சுமார் 15 அடி உயரத்திற்குப் பனிக் கட்டிகள் விழுந்துள்ளன என்று இந்திய இராணுவத்தினர் தெரிவித்தனர். இந்தப் பனிப்பொழிவு காரணமாக நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளதாக காஷ்மீர் செய்திகள் தெரிவித்தன. (க-8)




# இந்தோனேஷியாவில் நிலச்சரிவு 150 இற்கும் மேற்பட்டோர் பலி!

ஜகார்த்தா,பெப்.23

இந்தோனேஷியாவில் பயங்கர மழையால் ஏற்பட்ட நிலச்சரிவால் 150 இற்கு மேற்பட்டோர் பரிதாபமாகப் பலியாகினர்.

சுனாமிப் பேரழிவில் இருந்து மீள்வதற்கு முன் இந்தோனேஷியாவை இயற்கை தொடர்ந்து விரட்டுகிறது. இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது பாண்டங். ஜகார்த்தாவில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இப்பகுதியில் நேற்றுமுன்தினம் பயங்கர புயல் மழை பெய்தது. 'சிமாஹி' என்ற இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் பல வீடுகள் தரைமட்டமாயின. அதிகாலையில் அசம்பாவிதம் நடந்ததால் வீடுகளில் தூங்கிக்கொண்டிருந்த நூறுக்கும் மேற்பட்டோர் மண்ணோடு மண்ணாகிப் போயினர்.

உலக அரங்கில்

இதுவரை 70 இற்கும் மேற்பட்ட வீடுகள் மீது மண் விழுந்து மூடிக்கிடக்கிறது. வீடுகளும் தரைமட்டமாகி உள்ளன. இடிபாடுகளில சிக்கியவர்கள் உயிர்பிழைப்பது கடினம் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர். மீட்புப் பணியில் இராணுவம், பொலீஸ், உள்ளூர் மக்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை 139 பேர் இடிபாடுகளில் சிக்கியிருப்பது தெரியவந்துள்ளது. அவர்கள் உயிருடன் இருக்க சாத்தியம் இல்லை என்று பொலீஸ ஆணையாளர் சுசியான்தி நிருபர்களிடம் கூறினார். பத்துக்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. (8)

# 500 பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்தது!



விடுதலை செய்யப்பட்ட கைதிகள் மகிழ்ச்சியில்...

ஜெருசலேம்,பெப்.23

இஸ்ரேல் -பலஸ்தீனத் தலைவர்களுக்கு இடையில் இம்மாதம் எகிப்தின் ஷரம் அல்ஷேக்கில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டுக்கு முன்னதாக - பரஸ்பர நம்பிக்கைகளை மேம்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக - பலஸ்தீனக் கைதிகள் 500 பேரை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மேற்குக் கரையிலும் காஸாவிலும் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதிகள் பஸ்களில் அனுப்பிவைக்கப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களை வரவேற்க எல்லைப் பகுதிகளில் அவர்களுடைய உறவினர்கள் பெரும் கூட்டமாக நின்றனர்.

தமது உறவினர்களைக் கட்டிப்பிடித்து தமது சந்தோஷத்தை வெளிப்படுத்திய காட்சிகள் இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கிடையில் சமாதனம் ஏற்பட்டுவிடும் என்பதற்கான சான்றாக அமைந்திருந்தன என்று அவதானிகளும் செய்தியாளர்களும் தெரிவித்தனர்.

கடந்த 10 ஆண்டுகளில் மிக அதிக அளவிலான கைதிகள் விடுதலை செய்யப்படும் சம்பவம் இதுவே ஆகும்.

மேலும், 400 பலஸ்தீனக் கைதிகளை மிக விரைவில் விடுதலை செய்வதாக இஸ்ரேல் உறுதியளித்துள்ளது.

விடுதலை செய்யப்படவுள்ளவர்களின் பெயர் பட்டியலை விசேட குழுவொன்று தயார் செய்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்று பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதிகள் விடுதலை செய்யப்பட்ட மேற்படி நிகழ்வில் பலஸ்தீன மூத்த அதிகாரிகள் எவரும்கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# தமிழ்ப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணியில் அரசு- புலிகள் இணைந்து செயற்படுவதே சிறந்தது

## முன்னாள் அமெரிக்க அதிபர் கிளின்ரன் கருத்து

கொழும்பு,பெப்.23

இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு அரசும் புலிகளும் இணைந்து செயற்படும் பொறிமுறையே சிறந்ததென இலங்கை வந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன் தெரிவித்தார்.

இந்த இணைப்பின் மூலம் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

தென்னிலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை அமெரிக்க முன்னாள் அதிபர்களான புஷ்ஷும் கிளின்ரனும் பார்வையிட்டனர். இதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே கிளின்ரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் மூன்று வருடங்கள் கடந்த நிலையில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவது பாராட்டுக்குரியது.

அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் 700 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக இலங்கைக்கு நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பெருமளவு மக்கள் இந்த உதவியில் பங்குபற்றியுள்ளனர். அவர்கள் இன்றும் உதவிபுரியக் காத்திருக்கின்றார்கள். ஆனால், வழங்கப்படும் நிதியுதவி மிகச்சரியான விதத்தில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அப்படி நடைபெறாவிட்டால் அவர்கள் தமது உதவிகளை நிறுத்திவிடுவார்கள். எனவே, உதவிகளைப் பெறும் அரசு பொருத்தமான வகையில் அதனைச் செலவிடுவதும், கண்காணிப்பதும் முக்கியமானது என்றார் கிளின்ரன்.

முன்னாள் அதிபர் புஷ் கருத்து வெளியிடுகையில், இயற்கை அனர்த்தப் புனர்வாழ்வுப் பணிகளில் தமிழ் மக்களும், அரசும் ஒன்றிணைந்து பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கை தனக்குள்ளதாகத் தெரிவித்தார். (8)






மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களும் தற்போது ஜேர்மனியில் வசிப்பவர்களுமாகிய **கருணாகரன் - தேன்மொழி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **வைஷ்ணவன்** (புளோறியன்) தனது 4 ஆவது பிறந்தநாளை இன்று (23.02.2005) புதன்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். வைஷ்ணவனை அன்பு அம்மா, அப்பா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் பலகலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென இந்நாளில் வாழ்த்துகின்றார்கள்.

அன்புடன்: **வ. அகிலன்** (மாமா).
வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.



## G.A.Q. (பேராதனை)

- ★ மேற்குறிப்பிட்ட பட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் *05. 03. 2005* வரை பதிவு செய்துகொள்ளலாம்.
- ★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- ★ யாழ். பல்கலைக்கழகத்திற்குரிய 1st in Com., G.A.Q. புதியபிரிவு விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.
- ★ விவரங்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு: S.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(42388) (43-14-42)



## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 12 |
| 09 | 03 |
| 1924 | 1998 |

அமரர் **அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்**

திதி: பூரணை 23. 02. 2005

ஆண்டுகள் ஏழானதப்பா!
ஆறவில்லை மனம் தேறவில்லை
ஆறுமுகன் திருவடியை தினமும் நாம்
ஆராதிக்கின்றோம் உங்கள் சாந்திக்காய்!

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி முருகன் கோயிலடி.
இணுவில்.
(42392) (42-14)


## வெளிவாரி அலகின் கலைமுதற்தேர்வு பெறுபேறுகள் நாளைமறுதினம் வெளியாகும்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலைமுதற்தேர்வு - 2001 பரீட்சையின் பெறுபேறுகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ளன.

பரீட்சைப பெறுபேறுகளை அன்றையதினம மாலை வெளிவாரிப் பிரிவின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள்பரீட்சார்த்திகள் விரைவில் நடைபெறவுள்ள கலைமுதற்தேர்வு பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் -

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை வியாழக்கிழமையாக இருந்த போதும் மீள்பரீட்சார்த்திகளுக்கு இதில் விலக்களிக்கப பட்டுள்ளது எனவும் -

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள அலகின் உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (10-12)

## சிகிச்சை பெறுவதற்குப் பின்னடிப்பு

வலி.தெற்கு,பெப்.23

யாழ்.மாவட்டத்தில் பல புற்றுநோயாளர்கள் இருப்பதாகவும் அவர்கள் தெல்லிப்பழையில் இயங்கி வரும் புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறப் பின்னடிக்கிறார்கள் எனவும் யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

நோயாளர்களின் நன்மை கருதி கஷ்டத்தின் மத்தியில் புற்றுநோய் வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைத்துள்ளோம்.

இருப்பினும், நோயாளர்கள இங்கு வருகை தருவது மிக அரிதாகவேயுள்ளது. நோயாளர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வாய்ப்பு வசதிகளை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (10-152)


## 31ஆம் நாளில் உள்ளம் கனக்கும் நினைவு அஞ்சலி

மலர்வு 22 - 11 - 1974

உதிர்வு 24 - 01 - 2005



**செல்லையா ரஜனிகாந்த்**
(சுரேன், சங்கமன்)

*உள்ளத்தில் பசுமரத்தாணியாய் பதிந்த சங்கமனே!*
*உலகியல் வாழ்வு உப்பைப் போல் கரைந்திடுமோ?*
*உன் புன்னகை தவழும் வதனமதிமுகமும்*
*உயர்ந்த பண்பும் சேர உப்போடு வலம் வந்தவனே!*
*உமது வரவின்றி எமது இடம் எல்லாம்*
*வெறுமையாகிவிட்டபோதும்*
*உள்ளளவும் நினைக்கின்றோம் உப்பிட்ட உன்னை*
*உயிர் பிரிந்த சங்கரன் தாள் சேர்ந்த சங்கமனே!*
*உன் ஆன்மா சாந்திபெற ஊழிமுதல்வனைத் தொழுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,*
*பஸ் நிலையம்,*
*பருத்தித்துறை.* (42393)(24-14-42)

உரிமையாளரும் ஊழியர்களும்.



## மரண அறிவித்தல்

### செல்லையா செல்வராஜா



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மடத்தடி, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராஜா 20.02.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அனனார் காலஞ்சென்ற செல்லையா - பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் தேவியின் அன்புக் கணவரும் சுதர்சன் (ஆஸ்திரேலியா), சுகிர்தன் (அமெரிக்கா), செல்வதேவா, செல்வக்குமார், துவாரகா (யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), கேதீசன் (ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் சேனாதிராசா, சற்குணராசா, சற்குணதேவி, சின்னராசா, செல்வமணி, மல்லிகா, றஞ்சிதமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமணி, கமலாம்பிகை (ஆசிரியை), கமலாம்பிகை காலஞ்சென்ற செல்லத்துரை, இந்திராதேவி, காலஞ்சென்ற கந்தசாமி, துரைராஜா, ராஜசிங்கம், சந்திரசேகரம், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, ஜெயவீரசிங்கம், காலஞ்சென்ற தேவராசா, அருள்வேல்நாதன், தங்கவேலாயுதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனகிரியைகளுக்காக கருகம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*மடத்தடி,*
*அல்வாய் கிழக்கு.* (C/41134)(42-14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



## கண்ணீர் அஞ்சலி



**சுப்பிரமணியம் சிவராஜா**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்தீரே
ஐயாவின் திருமுகத்தைக் காணாது எமதுள்ளம் வாடுதே!
எம்மைத் தவிக்க விட்டு காலனவன்
உமைக் கவர்ந்தானோ?
சொல்ல வந்த கதையெல்லாம்
சொல்ல மறந்து சென்றீரோ?
எங்கு நீர் சென்றாலும் நாம்
மறவோம் உம்மை!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறுவனத்தினரும் ஊழியர்களும்**

COINS STARS ENTERPRISES
வெள்ளவத்தை,
கொழும்பு -06.

லிங்கம் உணவகம்,
சாவகச்சேரி.
(C/41129)(42-14)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2063, 222 3837.

# விதைத்த வினையை அறுக்கிறது தெற்கு

*'ஆயுதங்களை வைத்துக்கொண்டு குற்றச் செயல் புரியும் கிரிமினல்களே இங்கு உள்ளனர். பாதாள உலகக் குழு என்று எதுவும் இங்கு இல்லை.'*

- இலங்கைத் தீவின் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இவ்வாறு கருத்துத் தெரிவித்து ஒரு வார காலத்துக்குள் எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்துக்குள் நீதிமன்ற அமர்வின்போது குண்டு வெடித்திருக்கின்றது. பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மிக முக்கிய நபர்கள் என்று கருதப்படும் சிலர் உட்பட 16 பேரும் மற்றைய கைதிகள் 11 பேரும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வசமாகக் கம்பிநீட்டிவிட்டனர்.

இத்துணிகரத் தாக்குதலுக்கும், அதைத் தொடர்ந்து முக்கிய சிறைக் கைதிகள் தப்பியதற்குப் பின்னரும் பொலீஸ்மா அதிபர் கூறுவதுபோல நாட்டில் பாதாள உலகக் குழு என ஒன்று இல்லை என்றும் வெறும் ஆயுதங்களைப் பயன்படுத்திக் குற்றச்செயல்களில் ஈடுபடும் கிரிமினல்களே இருக்கிறார்கள் என்றும் கருதலாமா என்பதை வாசகர்களிடமே விட்டுவிடுவோம்.

நோயின் மூலகாரணிக்கு மருந்து காணாமல், நோயின் வெளிப்பாடு அறிகுறிகளுக்கு வைத்தியம் செய்வதுதான் இலங்கை அரச நிர்வாகத்தின் போக்கு என்பதால் அந்த நடைமுறையே இனிமேல் இந்த விடயத்திலும் பின்பற்றப்படும் என்பதை நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்.

இவ்வாறு ஆபத்தான கைதிகளை ஒவ்வொரு தவணையின்போதும் சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்து வந்து, நீதிவான் முன்நிறுத்துவது என்பது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான - நெருக்கடியான - காரியம் என்பதால் இதற்கான மாற்றுவழி குறித்து இனிமேல் ஆராய்வார்கள் எனவும் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

சிறையிலிருந்து கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்து வருவதில்தானே பிரச்சினை, பாதுகாப்புச் சிக்கல் எல்லாம். நீதிமன்றத்தையே சிறைச்சாலைக்குள் கொண்டுவந்துவிட்டால் இந்தப் பிரச்சினை இல்லையே என்று அதிகாரிகளும் அரசுத் தரப்பினரும் நிச்சயம் சிந்திப்பார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலம் விசாரணை ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கு தடுப்புக் காவல் பிரதேசத்திலேயே விசேட நீதிமன்ற அமர்வுகளை நடத்துவது போல, இந்தத் தென்னிலங்கைப் பயங்கரப் பேர்வழிகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளும் அந்தச் சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைக்கூடங்களை அண்டியே நடத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனாலும் இந்தப் பயங்கர பேர்வழிகள் - 'பாதாள உலகக் குழுவினர்' - உருவானதற்கும் தொடர்ந்து உருவாகுவதற்கும் காரணம், காரணர்கள் குறித்தெல்லாம் யாரும் பேசமாட்டார்கள்; கவனிக்கமாட்டார்கள் அதுதான் தென்னிலங்கைப் போக்கு.

கௌரவ வாழ்வுக்கும், இருப்புக்குமான ஈழத் தமிழர்களின் போராட்டத்தை அடக்கி, ஒடுக்குவதற்காகத் தென்னிலங்கையின் ஆக்கிரமிப்பு ஆட்சி எடுத்த - மேற்கொண்ட - நடவடிக்கைகளே, அதற்கே இப்படி வினையாய் - விலையாய் - வந்துமுடிந்திருக்கின்றது.

தமிழ்த் தீவிரவாதிகளை அடக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு வகை, தொகையின்றி சிறுரக ஆயுதங்களை வாங்கிக் குவித்து சுவீகரித்து, அவற்றைத் தமிழர் தாயகம் நோக்கித் தள்ளினார்கள். தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற நம்பிக்கையில் கணக்கு, வழக்கின்றி - கட்டுப்பாடின்றி - வடக்கு, கிழக்குக்கு அனுப்பப்பட்டவை இப்போது தென்னிலங்கைக்குத் திரும்பிச் சுற்றிக்கொண்டு வந்து தமது கைவரிசையைக் காட்டி நிற்கின்றன.

தமிழ்த் தீவிரவாதிகளை அடக்கும் (?) அதே காரணத்துக்காக தெற்கில் படித்தவர்கள், படியாதவர்கள், நல்லவர்கள் - கூடாதவர்கள், வல்லவர்கள், கிரிமினல்கள், மூர்க்கத்தனமானவர்கள், ஒழுக்கக் கட்டுப்பாடு உள்ளவர்கள் - இல்லாதவர்கள் என்று வேறுபாடின்றி இளம் சமூகத்தவர்கள் அனைவரையும் ஆயுதப் பயிற்சி கொடுத்து வடக்கு - கிழக்குக்கு அள்ளிக் கட்டி அனுப்பிவைத்தன அடுத்தடுத்து பதவிக்கு வந்த தென்னிலங்கை அரசுகள்.

விளைவு........?

இன்று தென்னிலங்கையில் ஆயுதப் பயிற்சி பெற்ற பின்னர் படைகளை விட்டு ஓடித் தலைமறைவானோர் சுமார் 25 ஆயிரம் பேர் உள்ளனர். சட்டவிரோத ஆயுதங்கள் - சுமார் ஐம்பதாயிரம் - பாதாள உலகத் தலைவர்களின் கைகளில் புழங்குகின்றன.

- இவைதான் தென்னிலங்கையின் இந்த - இன்றைய - மோசமான நிலைமைக்கு முக்கிய காரணங்கள்.

ஆயுதப் பயிற்சி பெற்ற பல்லாயிரம் இளைஞர்களைக் கொண்டு பல்வேறு குழுக்களாக - அமைப்புகளாக - தமிழர்கள் மத்தியில் இயங்கிய பல இயக்கங்கள் செத்துவிட்டன. அவற்றின் கைகளிலிருந்த ஆயுதங்கள் நழுவிவிட்டன. ஆயுதப் பயிற்சி பெற்ற அவற்றின் உறுப்பினர்களும் அந்தந்த இயக்கங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி சமூகத்துக்குள் விடப்பட்டுள்ளனர். இந்நிலையில், தமிழர் மத்தியில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதற்குச் சட்டரீதியான அரச நிர்வாகமும் இருக்கவில்லை.

இந்தப் புறச் சூழ்நிலையில் பாதாள உலகக் கும்பல்கள் தமிழர்கள் மத்தியில்தான் உருவாகியிருக்க வேண்டும்.

ஆனால், அரசுப் படைகளின் புலனாய்வுக் குழுக்களுடன் துணைப்படைபோல இயங்கும் கருணா அணி, புளொட் மோகன் குழு போன்ற ஓரிரு சமூக விரோதக் கும்பல்கள்தான் இப்போது தமிழர்கள் மத்தியில் செயற்படுகின்றன - அதுவும் அரசுப் படைகளின் பராமரிப்பில்.

வினை விதைத்ததால் அதனையே அறுக்கிறது தென்னிலங்கை.

# தமிழர்களின் பிரிந்து செல்லும் தகைமையை உலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கோரிக்கை

இலங்கை அரசு தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது என்பதுவே மூன்று வருட கால போர் நிறுத்த உடன்பாடு நிரூபிக்கும் செய்தியென அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு. போர்நிறுத்த உடன்பாடு நான்காவது ஆண்டை எட்டுவது தொடர்பாக வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளது.

சிங்கள தேசத்தின் இந்த உரிமை மறுப்பு நிலையைக் கருத்தில் எடுத்து, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்மக்கள் பிரிந்து செல்லும் உரிமையைப் பிரயோகிக்கும் தகைமையைக் கொண்டவர்கள் என்பதை உலக சமூகம் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அனைத்துலக தமிழர் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

கடந்த மூன்று வருட போர்நிறுத்த காலகட்டத்தில் தமிழ் மக்களின் வாழ்நிலையில் எதுவித குறிப்பிடத்தக்க மாற்றங்களும் இடம்பெறவில்லை. அவர்களுக்கான பொருளாதார, சமூக உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன. அவர்களிற்கான இடைக்கால அரச கட்டமைப்புகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. சிறுவர்கள், பெண்கள் உட்படப் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பல தரப்பும் தொடர்ந்தும் துன்பத்தில் வாழ்ந்து வருகின்றன.

மறுபுறம், புலிகளுக்கும் புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான படுகொலை நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இதில் இராணுவத்தின் பங்கு மறுக்கமுடியாத விதத்தில் வெளிப்படையானதாகவுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு மற்றும் இணக்கப் பேச்சுக்களின் பங்காளர்களான புலிகளை இன்றைய இலங்கை அரசு ஓரம் தள்ளும் இராஜதந்திர - இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பதும் வெளிப்படையானது.

கடந்த டிசெம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவுகளின்போது கூட இத்தகைய புறம்தள்ளும் நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வந்துள்ளது.

கடந்த நவம்பரில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் இந்த இனவாதக் கடும்போக்கைச் சுட்டிக்காட்டி, இந்த நிலையில் மாற்றம் காணப்படாத விடயத்தில் தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் உரிமை கொண்டவர்கள் என்பதைப் பிரகடனப்படுத்தியிருந்தார்.

இந்தப் பின்னணியில் உலக சமூகம் தமிழ்மக்களின் வாழ்நிலை கடினங்களையும் சிங்கள அமைப்பின் உரிமை மறுப்பு நிலையையும் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுதல் விடுத்துள்ள அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பிரிந்து செல்லும் தமது உரிமையைப் பிரயோகிக்கும் தகைமையைக் கொண்டவர்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வேண்டியுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளாக இலங்கைத்தீவில் இடம்பெறும் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாகவும் ஐந்து ஆண்டுகளாகத் தொடரும் சர்வதேச இணக்க முயற்சிகள் தொடர்பாகவும் இலங்கை ஜனாதிபதியும் அரசும் கடைப்பிடித்த நிலைப்பாடுகள் தொடர்பான ஆவணமொன்றை அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு நேற்று ஜெனீவாவில் வெளியிட்டுள்ளது. (8)

# எதிர்காலத்தில் கடல்நீரின் மட்டம் மேலும் உயரக்கூடிய வாய்ப்புள்ளது

## வானிலை அவதான நிலையப் பணிப்பாளர் நாயகம்

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் கடலின் நீர்மட்டம் மேலும் ஒரு மீற்றர் வரையில் உயரக்கூடுமென்று வானிலை அவதான நிலையப் பணிப்பாளர் நாயகம் ஜீ.எச்.பி.தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் இயற்கை அனர்த்தங்களால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைப்பது தொடர்பாக நியமனம் செய்யப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுடன் கொழும்பில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

சில ஆண்டுகளுக்குள் மாலைதீவைச் சூழவுள்ள கடலின் நீர்மட்டம் உயர்ந்து மாலைதீவை மூழகடித்துவிடும். இதனால், இலங்கையைச் சூழவுள்ள கடல் நீர் மட்டம் உயரும் ஆபத்து உருவாகவுள்ளது.

எனவே, கடல் மூலம் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து பொதுமக்களையும், சொத்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டு இயற்கை ஆபத்துக்களை முன்னறிவிப்புச் செய்யும் நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட பாதுகாப்புச் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (10-202-206)

# வெளியீடுகளில் தமிழைத் தவறாக பயன்படுத்தும் போக்கு அதிகரிக்கிறது

## நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் சாந்தன் கவலை

யாழ்ப்பாணம்,பெப்.23

தமிழ்க்கொலை என்பது அந்நிய நூலின் மட்டுமன்றி எம்மாலும் செய்யப்படலாம். இன்று பத்திரிகைகளிலும் நூல்களிலும் கூடத் தமிழைத் தவறாகப் பயன்படுத்தும் போக்கு பரவலாகத் தெரிகின்றது. இந்த நிலைமை தடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் ஐ.சாந்தன்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் 'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' என்ற கவிதைத் தொகுப்பு நூலின் மதிப்பீட்டுரையிலேயே அவர் இப்படிக் கவலை தெரிவித்தார்.

இந்த நூலின் வெளியீட்டு விழா கடந்த சனியன்று காலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

அந்த விழாவில் தமது மதிப்பீட்டுரையில் சாந்தன் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்க்கொலை என்பது அந்நியரால் மட்டுமன்றி எம்மாலும் செய்யப்படலாம். பத்திரிகைகளிலும் நூல்களிலும் கூடத் தமிழைத் தவறாகப் பயன்படுத்தும் போக்கு இப்போது பரவலாகத் தெரிகிறது. மாற்றார் செய்யும் அழிப்புக்களைத் தடுக்கும் சக்தி எமக்கிருப்பது போலவே எம்மவரால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கும் முனைப்பும் அவசியம். இளைய தலைமுறைக்கு உதவி செய்யத் தமிழறிஞர்கள் முன்வரவேண்டும்.

உருவம் - உள்ளடக்கம் இரண்டும் பிரிக்கமுடியாதபடி இணைந்ததுதான் ஒரு கலைப்படைப்பு . இவற்றைப் பிரித்து நோக்கவேண்டிய நிர்ப்பந்தம் வரவேற்கக் கூடிய ஒன்றன்று. அத்துடன், கலை என்பது சுயம் சார்ந்தது. தன் கலையின் தனித்துவ அடையாளங்களைப் பேண வேண்டிய கடப்பாடு எந்த ஒரு கலைஞனுக்குமுண்டு.

எமது அனுபவச் செழுமையும் உணர்வுகளின் தீவிரத்தையும் சிறப்பான இலக்கியங்களாக்குவதற்கு தேர்ந்த வாசிப்பும் தீவிர எழுத்துப் பயிற்சியும் எமக்கு அவசியம். - என்றார் (ஐ)

# பாதிக்கப்பட்ட [illegible]வருக்கு மேலும் ஐம்பது படகுகள்

## 'கியூமெடிக்கா' நிறுவனம் வழங்கியது

தொண்டைமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான வடமராட்சி வடக்கில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீளவும் கடற்றொழிலை ஆரம்பிக்க வசதியாக 'ஹியூமெடிக்கா' நிறுவனம் மேலும் 50 படகுகளையும் அவற்றுக்கான மீன்பிடிவலை, உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

இந்நிறுவனம் முதற்கட்டமாகப் பாதிக்கப்பட்ட இதே பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் 14 பேருக்குச் சில வாரங்களுக்கு முன்னர் 14 படகுகளையும் அவற்றுக்கான வலைகளையும் வழங்கியிருந்தது.

இதனைத் தொடர்ந்து 36 படகுகளையும் அவற்றுக்கான வலைகளையும் வழங்கியிருந்தது. மஹியூமெடிக்காடு நிறுவனம் கொழும்பிலிருந்து ஏ-9 பாதை ஊடாக இப்பொருள்களை எடுத்துவந்து

எடுத்துவந்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திடம் கையளித்துள்ளது. மேலும் 14 படகுகளும் அவற்றுக்கான வலைகளும் இரண்டொரு தினங்களில் வந்துசேர்ந்த பின்னர் தெரிவு செய்யப்பட்ட 50 மீனவர்களுக்கு படகுகளும் வலைகளும் வழங்கப்படும் என வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார். (8-173)

நாளை

காலை
மாசி 12
வியாழக்கிழமை
24.02.2005
திதி : பூரணை
முற்பகல் 11.22வரை
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 2.19 வரை
மாசிமகம்
சுபநேரம் : 7.59 - 9.29
ராகுகாலம் : 1.59 - 3.29
(யாவும் பழைய நேரப்படி)

# பாடசாலை நிகழ்வுகளை சாதாரணமாக நடத்தவும்

## கல்வியமைச்சின் சுற்றறிக்கை தெரிவிப்பு

அச்சுவேலி,பெப்.23

பாடசாலை நிகழ்வுகளை விழாக்களாக நடத்துவதை இடைநிறுத்தி, சாதாரண நிகழ்வுகளாக நடத்துமாறு கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி உள்ளது.

பாடசாலை நிகழ்வுகள் தொடர்பாகக் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையை மேற்கொள்காட்டி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விளக்கமான சுற்றறிக்கையினை பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி இடம் பெற்ற சுனாமி பேரலை அனர்த்தத்தினால் மக்கள் துயருற்றிருக்கும் வேளையில் விளையாட்டுப் போட்டி மற்றும் பாடசாலை நிகழ்வுகளை விழாக்களாக நடத்துவது, 'பாண்ட்' வாத்தியம் இசைப்பது என்பன ஏற்புடையவை அல்ல.

பாடசாலை நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளைப் பாடசாலை மட்டத்தில் நடத்தி மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதோடு, வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்குமாறும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை அடுத்து முதலாம் தவணையில் பாடசாலைகளில் ஆடம்பரமாக நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விழாக்களின் ஏற்பாடுகள் கைவிடப்பட்டு சாதாரணமாக அவை நடைபெறுகின்றன. (10-11)

உதயக்கு


எதிர்காலத்தை நீ விரும்பினால், நிகழ்காலத்தில் ஒன்றும் மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் தியாகம் செய்துவிடவேண்டும்.

- மாக்ஸிம் கார்க்கி.

# நீங்காத நினைவுகளில் 31 ஆம் நாள்

பிறப்பு
22
11
1974

இறப்பு
24
01
2005



அமரர்

## செல்லையா ரஜனிகாந்த்

(சுரேன்–சங்கமன்)



கூடிக் குலாவி ஓர் குழாமாய்
நாமிருந்தோம்
பாடித் திரியும் ஓர் பறவையாய்
நீ வலம் வந்தாய்
எமைப் பிரிந்து ஓர் திங்கள்
ஓடிடினும் – என்றும்
பிரியாது உன் நினைவுகள்
நிலைத்திருக்கும்!

110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

- நண்பர்கள். -

(42384)

# சுனாமியால் சேதமான 11 பாடசாலைகளை சர்வதேசக் கல்வியகம் புனரமைக்கும்

## ஒப்பந்தம் நாளை கைச்சாத்து

யாழ்ப்பாணம்,பெப்.23

இலங்கையில் சுனாமி ஆழிப்பேரலை அனர்த தத்தினால அழிந்துபோன மற்றும் சேதமடைந்த பதினொரு பாடசாலைகளைப் புனரமைத்துக் கொடுபபதற்கு சர்வதேசக் கல்வியகம் முன்வந் துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏழு பாட சாலைகளும், தென்னிலங்கையில் நான்கு பாடசாலைகளும் இவ்வாறு புனரமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இத்தகவலை சர்வதேச கல்வியகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய இணைப் பாளர் அலோசியஸ் மத்தியூஸ் தெரிவித்தார்.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடு வதற்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வரு கைதந்த சர்வதேச கல்வியகத்தின் அதிகாரி கள் நேற்று முன்தினமிரவு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார் கள. அக்கலந்துரையாடலிலேயே மேற்படித் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பதினொரு பாடசாலைகளையும் புனர மைப்பதற்கான ஒப்பந்தம் நாளை 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பு இசுருபா யாவிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளர் அலு வலகத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் திரு கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட் டங்களிலும் தென்னிலங்கையில் மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளே புனரமைத்துக் கொடுக் கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டக் களப்பு செட்டிபாலயம் மகாவித்தியாலயம், குருக கள்மடம் கலைவாணி வித்தியாலயம், அம்பா றையில் அல்-ஜெஸ்ரா வித்தியாலயம், திருகோ ணமலையில் ஈச்சிலம்பற்றை உப்புறல் சிவ சக்தி வித்தியாலயம், நிலாவெளி மகாவித்தி யாலயம், சீனன்வெளி ஆதவன் வித்தியால யம், குச்சவெளி அல்மோறியா வித்தியாலயம் ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளன. (8-7)



சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்த சர்வதேசக் கல்வியகத்தின் அதிகாரிகள் நேற்றுமுன்தினமிரவு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சர்வதேச கல்வியகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸ், சர்வதேச கல்வியகத்தின் பொதுச் செயலாளரும், உலக தொழிற்சங்க சம்மேளனங்களின் தலைவருமான விரட் வன்லியூவன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், யாழ்.இந்துமகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ச.ஜெயராஜா, தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த.பஞ்ச லிங்கம், யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# பேரலையால் உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்குத் தலா 10ஆயிரம் ரூபா

## தமிழர் ஆசிரியர் சங்கம் வழங்கவுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.23

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேர லையில் சிக்கி உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்குத் தலா பத்தாயிரம் ரூபா நிதி உதவியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம வழங்கவுள்ளது.

இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது:-

ஆழிப்பேரலையில் சிக்கி வடக்கு-கிழக்குப் பகுதியில் 37 ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளனர் என்று திரப்பட்ட தகவல்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த ஆசிரியர்களின் உரித்துடை யோர் மரணச்சான்றிதழுடன் இதற்கு விண் ணப்பிக்கவேண்டும்.

அதேபோன்று, வீடுகள் மற்றும் உடைமை களை முற்றாக இழந்த ஆசிரியர்களுக்கும் நிதி உதவி வழங்கப்படும். விண்ணப்பிக்கும் தொகையைப் பொறுத்தே இவர்களுக்குரிய நிதி வழங்கப்படவுள்ளது - என்றார். (8-7)

# கடற்றொழிலாளர்களுக்கு வலைகள் 'மூவிமொண்டோ' விநியோகம்

வலி.மேற்கு,பெப்.23

வலி.மேற்குப் பிரதேசத்தில் உள்ள 275 கடற் தொழிலாளர்களுக்கு மூவிமொண்டோ நிறுவனத தினர் மீன்பிடி வலைகளை வழங்கியுள்ளனர்.

அராலி, சுழிபுரம், தொல்புரம், மூளாய், பொன் னாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த வருமா னம் குறைந்த 275 கடற்றொழிலாளர் குடும்பங் களுக்கு இந்த மீன்பிடி வலைகள் வழங்கப்பட் டுள்ளன.

வலி.மேற்குப் பிரதேசசெயலர் சீ.ஏ.மோகன்றாஸ மேற்கொண்ட முயற்சியினாலேயே கடற்றொழி லாளர்களுக்கு மீன்பிடி வலைகள் விநியோகிக் கப்பட்டன. (8-175)

### வவுனியாவில் 17 படையினர் நோய்வாய்ப்பட்ட சம்பவம்

# வெடிமருந்து கலந்த உணவை பலாத்காரமாக உண்ண வைத்தனராம்!

கொழும்பு,பெப்.23

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தின ருக்கு அதன் பயிற்சி அதிகாரி பலாத்காரமாக வெடிமருந்து கலந்த உணவைப் பருக்கியதா லேயே வவுனியாவில் 17 இராணுவத்தினர் நோய் வாய்ப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

வவுனியா இராணுவப் பயிற்சி முகாமில் அதிவிசேட பயிற்சியில் ஈடுபட்டு வந்த இராணு வத்தினரில் 17 பேர் கடந்த சனியன்று திடீர் சுகவீனமுற்று வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரின் உடல்நிலை மோசமாக இருந்ததால் அவர் அநு ராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவர்கள் 17 பேரும் திடீர் சுகவீனமுற்ற தற்கு, வெடிமருந்து கலக்கப்பட்ட உணவு வழங் கப்பட்டதே காரணம் என்று பொலீஸ் விசார ணைகளின் போது தெரியவந்துள்ளதாம்.

வெடிமருந்து கலக்கப்பட்ட உணவை உண் ணுமாறு பயிற்சி வழங்கும் அதிகாரி வற்புறுத் தினார் என்று பாதிக்கப்பட்ட இராணுவத்தின ரில் சிலர் பொலீஸாரிடம் கூறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து இராணுவத் தலை மையகத்திடம் வினாவியபோது, வெடிமருந் துடன் தொடர்புடைய இராணுவப்பயிற்சி வழங்கப்படுவது உண்மையென்றும் உணவில் வெடிமருந்து கலக்கப்பட்டு பலாத்காரமாக அதை உண்ணக் கொடுக்கப்பட்டது என்பது பொய். அப்படியான முறைபபாடு எதுவும் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் தெரி விக்கப்பட்டது. (எ-க)

# யாழ்.மாவட்ட சாரணர்கள் சிரமதானப் பணி

யாழ்ப்பாணம்,பெப்.23

பேடன் பவல் பிரபு நினைவாக யாழ்.மாவட்ட சாரணர்கள் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு சிரதமானப் பணி செய்யவுள்ளனர்.

கோண்டாவில் வீதியில் அமைந்துள்ள தாயகச் சிறுவர் இல்லத்தின் புதிய வளாகத் தில் இடம்பெறவுள்ள இச்சிரமதானப் பணியில் சகல சாரணர்களையும், சாரண ஆசிரியர்களை யும் பங்குகொள்ளுமாறு யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் சு.ஏகாம்பரநாதன் கேட்டுள்ளார் (8-202)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பம்

வலி.தெற்கு, பெப்.23

சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளுடன் இன்று ஆரம்பமாகும். மகோற்சவம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

மகோற்சவ காலத்தில் விசேட அபிஷேக பூசைகளுடன் இந்து கலாசார அமைச்சின் யாழ்ப்பாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் தின மும் சமய சொற்பொழிவுகள் நடைபெற ஒழுங்கு கள் செய்யப்பட்டுள்ளன.

கீரிமலைத் தீர்த்தக்கரையில் அண்மையில் நிகழ்ந்த சுனாமி கடலலை அனர்த்தத்தினால் உயிரிழந்த மக்களுக்கான ஆத்மசாந்தி பிரார்த் தனைகள், கிரியைகள் என்பனவும் இடம்பெற வுள்ளன.

தெல்லிப்பழை இராணுவ சோதனைச் சாவடி யூடாகக் கீரிமலை செல்லும் பக்தர்களின் வசதி கருதி வடபிராந்திய போக்குவரத்து சபையினர் காலை ஒன்பது மணியில் இருந்து பஸ் சேவையை நடத்தவுள்ளனர்.

அதேவேளை, சேந்தான்குளம் பாதையூடா கவும் பக்தர்கள் கீரிமலை சென்று வர இராணு வத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மகோற்சவ காலத்தில் மாணவர்கள் கலந்துகொண்டு கூட்டுப் பிரார்த்தனைகள், வழிபாடுகள், கதாப்பிரசங்கம் போன்ற சமய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (8-152)

# சூழல் பிரச்சினைகளை மீளாய்வு செய்ய மாகாண திட்டமிடல் செயலகம் நடவடிக்கை

வலி.தெற்கு.பெப்.23

சூழல் தொடர்பான பிரச்சினைகளை மீளாய்வு செய்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாண திட்ட மிடல் செயலகம் நடவடிக்கை எடுத்து வரு கின்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல் லைத்தீவு, வவுனியா ஆகிய எட்டு மாவட்டங் களிலும் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்ளூராட்சிச் சபைகள் மூலம் நிலம், நீர், வளி, கடற்கரை, காட்டுவளம், திண்மக் கழிவுகள் போன்றவற்றால் சூழல் மாசடைதல் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டுள் ளன.

சூழல் மாசடைதல் தொடர்பாகவும் அலை பற்றிய மதிப்பீடுகளையும் மார்ச் மாதம் 25ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும், மேலதிக விவரங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத் திட்டமிடல் பிரிவுச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறும் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் செயலாளர், உள்ளூ ராட்சி சபைச் செயலாளர்களுக்கு அறிவித் துள்ளார். (10-152)

# மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.23

ஆவரங்கால் மற்றும் அச்சுவேலிப் பிரதேச சவாரிப் பிரியர்களால் நடத்தப்படும் யாழ், வன்னிக் காளைகள் பங்கேற்கும் மாட்டுவண்டி சவாரிப போட்டி மார்ச் 6 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (10-202)

# பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்,22

எழுதுவினைஞர் சேவை தரம்-II 'அ' பதவி உயர்வுப் பரீட்சைக்குத் தோற்றுபவர் களின் நலன்கருதி உள்ளூராட்சி எழுதுவினை ஞர் சங்கத்தினால் பயிற்சி வகுப்புகள் நடத் தப்படவுள்ளன.

பயிற்சிவகுப்பு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமா கும். வகுப்புக்கள் தொடர்ந்து சனி, ஞாயிறு விடு முறை தினங்களில் நடைபெறும் என்றும், உள் ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் அங்கத் தவர்களும், இதுவரையில் மேற்படி சங்கத்தில் இணைந்துகொள்ளாதவர்களை இணைத்துக் கொள்ளும் வகையில் அவர்களும் இந்தப் பயிற்சி வகுப்பில் இணைத்துக்கொள்ளப்படு வர் என்றும் -மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ளவிரும் பும் புதிய அங்கத்தவர்கள் செ.சந்திரசேகரம் (வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்), ச.விஜயரத்தினம் (வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), க.ஜெயானந்தன் (நகரசபை ,சாவகச்சேரி) என்ற முகவரிக்குத் தமது விண் ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வலி.தென்மேற்கில் நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட் பட்ட சுதுமலை, பண்டத்தரிப்பு பகுதிகளில் இன் றும், நாளை மறுதினமும் நாய்களை அழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவிருக்கின்றது எனப் பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவு தெரிவித்தது. (3)

# கவிதை நூல் வெளியிடப்பட்டது

குருநகர்,பெப்.23

கவிஞர் மு.புஸ்பராஜாவின் 'மீண்டும் வரும் நாள்கள்' கவிதைநூல் கடந்த 19ஆம் திகதி யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது மண்டபத்தில் மாலை 4.45 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடை பெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வில் எழுத்தாளர் ஏ.ஜே.கனகரட்ணா நூலை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை கவிஞர் வேல்மாறன் பெற்றுக் கொண்டார்.

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஊட கப் பிரிவுப் பொறுப்பாளர் செல்மர் எமில் வர வேற்புரையையும் யேசுராசா வெளியீட்டுரை யையும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரி வுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, திரு மறைக கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் ம.சாம் பிரதீபன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் நிகழ்த் தினர். கவிஞர் மு.புஸ்பராஜன் 1970ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு காலப்பகுதிகளில் எழு திய 62 கவிதைகள் இக்கவிதை நூலில் இடம் பெற்றுள்ளன. (த-51)

# அறிவித்தல்

மஞ்சத்தடி, இணுவிலைச் சேர்ந்த கந்தையா குழந்தை வேலு (தே.அ.அ.இல 273371095V) கந்தையா பசுபதி (தே.அ.அ.இல 360651410V) கந்தையா கணேசு மகள் முருகையா (தே.அ.அ.இல 502611879V) ஆகிய நாம் இத்தால் அறியத்தருவது.

எமது சொரியல்பங்கு ஆதனமான 11-02-1978இல் நொத்தாரிஸ் செ.இராமலிங்கம் 12492ஆம் இலக்கத்தில், எமது காலஞ் சென்ற சகோதரி சுன்னாகம் செல்லப்பா சுப்பிரமணியம் பெண் மகேஸ்வரி ஆகியோரின் பெயரில் நிறைவேறிய அறுதி உறுதி ஆதனமான "சுன்னாகம் இறை" "புளியன்புலம்" நில.பர.7குளி 8.7/10இல் சொரியலாக உள்ள பங்கை விற்பனை செய்யவுள்ளோம் என்பதை இத்தால் அறிவிக்கின்றோம்.

கந்தையா குழந்தை வேலு,
கந்தையா பசுபதி,
கணேசு முருகையா.

விளம்பர வரைவு:
ஞா.சிவஞானம் சட்டத்தரணி.
(42359)(46-11)

## வெடிக்காத நிலையில் கிரனேட்

தென்மராட்சி,பெப்.23

சாவகச்சேரி தபாலகக் காணியில் வெடிக்காத நிலையில் 'கிரனேட்' ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களின் பின்னர் தபாலகம் புனரமைக்கப்பட்ட போதிலும் காணியில் உள்ள பற்றைகள் மூன்று வருடங்களாகத் துப்புரவு செய்யப்படாமல் உள்ளன.

அண்மையில் இக்காணியைத் துப்புரவு செய்த சிற்றூழியர் ஒருவர் வெடிக்காத நிலையில் இருந்த கிரனேட்டைக் கண்டுபிடித்தார்.

அருகில் உள்ள படை முகாமுக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டது. (10-117)

## வைத்தியசாலைக்கு மருந்துவகைகள்

தென்மராட்சி,பெப்.23

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி மருந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனத்தினர் இந்த மருந்துப் பொருள்களை கடந்தவாரம் வைத்தியசாலை பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் ச.பாலகுமாரிடம் கையளித்தனர்.

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான இந்த நிறுவனத்தினரால் பெறுமதிமிக்க மருந்துப் பொருள்கள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (10-117)

## [illegible] 10ஆ[illegible] ஆண்டில்....



மலர்வு: 18-04-1942

உதிர்வு: 14-02-1995

திதி: 23-02-2005

நித்திலத்தைவிட்டு
நீங்கள் பிரிந்து
பத்து ஆண்டுகள்
பறந்தோடினும்
நித்தமும் நெஞ்சமழுகின்றது
உங்கள் நினைவுகளால்...!

அமரர்
**தியாகராஜா அரசரத்தினம்**
(முன்னாள் சாரதி இ.போ.ச.)

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(42353)(26-11)

நெஞ்சகலாத நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎ :0112334603
அனைத்துப் பாமசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 22 11 1974

மறைவு: 25 01 2005

**செல்லையா ரஜனிகாந்**
(சங்கமன் - சுரேன்)

*அன்போடு அரவணைத்து பாசமாய் இருந்தோமே!*
*பண்போடு வாழ்ந்திருந்து எம்மைவிட்டுப் பிரிந்தாயே!*
*நினைக்கவே நெஞ்சம் தாங்குதில்லையே ரஜனி காந்தே!*
*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.*

எனது அன்பு மகனின் மறைவுச் செய்திகேட்டு நேரில் கலந்துகொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள், மலர்மாலைகள் அணிவித்தோர், மலர்வளையங்கள் சமர்ப்பித்தோர், வியாபார முதலாளர்கள், சனசமூக நிலையத்தினர், ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்தவர்கள், பொருண்மிய நிறுவனத்தினர், கல்வி வலய நண்பர்கள், கராத்தே கழகத்தினர்கள் மற்றும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபந் தெரிவித்தோர் அனைவருக்கும் முக்கியமாக பரதன் மல்ரிபிள் சேவிஸ் நிறுவனத்தினருக்கும் நண்பர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது சிரம்தாழ்த்திய நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (23-02-2005) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

4/2, அம்பாள் வீதி
(செம்மணி வழி),
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, குடும்பத்தினர்.

## ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி



மண்ணில்: 17 01 1927

விண்ணில்: 23 02 2004

**தியோகு இராயப்பு**
**(சின்னப்பு)**

**பப்பா!** நம்பமுடியவில்லை நீங்கள் எம்மைப்பிரிந்ததை.
நம்பித்தான் ஆகவேண்டும் அது யதார்த்தம்.
அலை அலை எனத் திரண்டு வரும் உம் நினைவலைகள்
மலை மலையாக எம்கண்முன்னே சமர்ப்பணம்.
**பப்பா!** ஒரு சபையைச் சிறப்பிக்க என் மக்கள், மருமக்கள்,
பேரர் போதும் என்பீர்கள்.
இன்று உங்கள் சபையைச் சிறப்பிக்க குடும்ப சமேதரராய்
நாம் அனைவரும் வந்து நிற்கின்றோம் நீங்கள் இல்லையே!
**பப்பா!** இன்று நீங்கள் எம்மைப் பிரிந்த ஓராண்டு நிறைவஞ்சலி
என்றும் உங்களுக்கு எம் மலரஞ்சலி;
உற்றார், உறவினரின் கண்ணீர் அஞ்சலி;
உம் பாசப்பிள்ளைகளின் பாதாஞ்சலி!

சண்முகம் வீதி, சாங்கத்தானை,
சாவகச்சேரி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(42287)


SALE SALE SALE SALE SALE SALE SALE

10%முதல்40% வரை
விலைக்கழிவில்:-
பாடசாலை மாணவருக்கானகறுப்பு வெள்ளை சப்பாத்துக்கள், ஆண்கள், பெண்களுக்கான பாதணிகள் மலிவு விலையில் கொள்வனவு செய்திட நாடுங்கள்
DSI காட்சி அறை
426, ஆஸ்பத்திரிவீதி
(பஸ்நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். T.P: 6809

DSI SUPERSPORT
DSI
RANPA
பாதணிகள்
மலிவு விற்பனை



# கஷ்டப்பிரதேச ஆசிரியர்களைக் கவனிக்காமல் விடுவது நியாயமா?

பிரதேச கல்விச் செயற்பாடு வினைத் திறனுடன் இடம்பெறுவதற்கு ஆசிரியர்களின் செயற்பாடு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

கல்வித்தர நிலையிலும், மாணவனின் ஆளுமை வழிப்படுத்தலிலும் ஆசிரியர் எனபவர் பல் வேறு அணுகுமுறை ஊடாக விருப்புணர் வுடனும், அர்ப்பணிப்புடனும் மாணவனின் விருத்தி மட்டத்துக்கு ஏற்பத் தன்னுடைய செயற்பங்கை மாற்றியமைத்து இயங்குவதைத் தன்னுடைய தொழில்சார் அணுகுமுறையாகக் கொண்டு செயற்படுகின்றான். இவ்வாறு ஆசிரியர் செயற் படுவதற்கு மனதளவில் மகிழ்வு, விருப்புணர்வு, ஈடுபாடு என்ற தன்மைகள் காணப்படுதல் அவசியம்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்ட போரியல், இயற்கை நிகழ்வுகளினால் எல்லோருடைய மனமும் ஏதோ ஒரு வகையில், பாதிப்படைந்தே உள்ளது. அந்தவகையில் சமூக உயிரியான ஆசிரியனது மனமும் உலக பொது நிகழ்வுக ளின்படி அமைந்த காரணிகளின் அடிப்படை யிலும், கல்வி நிர்வாக அதிகாரிகளினது செயற் பாடுகளினாலும் ஏதோ ஒரு வகையில் ஏமாற் றப்படுகிறது அல்லது துன்புறுத்தப்படுகிறது.

மொத்தத்தில் ஆசிரிய சமூகத்தினது அடிப் படை உரிமை மீறப்படுவதாக பல்வேறு நடவ டிக்கைகள் கண்முன்னே நடைபெறுகின்றன.

ஆசிரியர்களின் தனிப்பட்ட கோபங்களை வைத்துக்கொண்டு பழிவாங்கும் செயற்பாடுகள் கல்வி நிர்வாகிகளிடம் மலியத் தொடங்கிவிட்டன.

### பாகுபாடு காட்டுதல்

பாகுபாடு காட்டும் தன்மை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இப்பாகுபாடு பிரதேச அடிப்படையில் இடம்பெறுவதை அவ தானிக்க முடிகிறது. இதனால் குறித்த பிர தேசத்தில் நியமனம் பெற்று பணியாற்றும் ஆசி ரியர்கள் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்க, மறுபுறத் தில் வாழ்க்கை முழுவதும் வீட்டு வாசலுடன் அமைந்த பாடசாலையில் பணியாற்றுகின்ற தன் மையைச் சர்வசாதாரணமாகக் காணமுடிகிறது.

கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக ஒரே ஆசிரியர் ஒரே பாடசாலையில் பணியாற் றுவதைக் காணமுடிகிறது. கொள்கையின் ஆசி ரிய இடமாற்ற தேசியகொள்கைப் பிரகாரம் ஒரு பாடசாலையில் ஆறுவருடங்களுக்கு மேலாகப் பணியாற்ற முடியாது எனக் குறிப்பிடப்பட்டு இருந் தும் கல்வி நிர்வாக அதிகாரிகள் இவ்விட யத்தில் தமது துரிதத்தன்மையை காட்டாமல் இருப்பது அவர்களின் நியாயத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவர்கள் இந்த விடயத்தில் சட்டப்படி செயற் படாமல் ஏனைய விடயங்களில் சட்டக்கோவையை புரட்டிப் புரட்டிப் பார்ப்பதில் எந்தவித பயனுமில்லை.

குறித்த பிரதேசத்துக்கு முதல் நியமனம் பெறும் ஒருவருக்கு குறிப்பிட்ட காலம்வரை வேலை செய்த பின்னர் இடமாற்றம் வழங்குவதே நியாய மானதாகும். கஷ்டப் பிரதேசம் அல்லது அதிகஷ் டப் பிரதேசம் என்ற அடிப்படையில் மாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும் முதல் நியமன அடிப்படையிலான ஆசிரியர்கள் 10 வருடங்க ளுக்கு மேலாகியும் தொடர்ந்தும் கஷ்டப்பிரதே சங்களிலேயே எதுவித முன்னேற்றமும் இன்றி மன தளவிலும், உடலளவிலும் சோர்வுற்ற நிலையில பணியாற்றி வருவதை இன்று காணமுடிகிறது.

இவர்கள் மத்தியில் கல்விநிர்வாக அதிகாரி கள் மீது நம்பிக்கையீனத் தன்மை காணப்படு வதோடு, நாங்கள் தொடர்ந்து இங்கே இருந்து தான கஷ்டப்படவேண்டும் என்ற தலையெழுத்து எனக் கூறுவதை அடிக்கடி கேட்கமுடிகிறது.

இவர்கள் எங்களுக்கு ஒருபோதும் இட மாற்றம் தரப்போவதில்லை எனவும், இடமாற்ற விண்ணப்பப்படிவம் போட்டு எதுவித பயனும் இல்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டு இருப் பதைக் காணமுடிகிறது.

### கஷ்டப்பிரதேச சேவை

இதனால் இவர்களினால் பாடசாலைச் செயற் பாட்டில் முழுதாக ஈடுபட விருப்பமில்லாத தன்மை காணப்படுகிறது. இத்தன்மை தீவக வலயக் கல்வி விருத்தி தாழ்நிலையில் இருப்பதற்கு ஒரு கார ணம் எனவும் கூறலாம். ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவம் உரிய முறையில் சோதிக்கப்பட்டு உரிய முறையில் பதில் அளிக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறி.

வசதியான பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் இப்படியான பிரசசினைகள் ஏற்பட சந்தர்ப்பங்களே இல்லை. அவர்களுக்கு இப்படியான பிரச்சினைகள் தெரிய வும் வாய்ப்பு இல்லை.

யாழ்ப்பாணக் கல்வி வலயம், வலிகாமகல்வி வலயங்களில் பணியாற்றும் ஆசிரியர்களில் எத் தனைபேர் கஷ்டப்பிரதேச கல்விச்சேவை புரிந் தார்கள் என்பதும் விரல்விட்டு எண்ணக் கூடி யது. எத்தனையோ ஆசிரியர்கள் பரம்பரை பரம் பரையாக ஒரே பாடசாலையில் கல்வி கற்று அங் கேயே கல்வி கற்பிக்கின்ற நிலையும் உண்டு.

வசதியான பகுதிகளில் உள்ள பாடசாலை களில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெரும்பா லும் கஷ்டப்பிரதேச பகுதிகளை அதிகளவு சொந்த இடமாகக் கொண்டவர்களாகவே உள் ளனர். இவர்கள் தங்களுடைய சொந்தக் கிரா மத்துப் பாடசாலைக் கல்வியை அபிவிருத்தி செய்யப் பின்னிற்கும் பொழுது நாம் ஏன் இங்கு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பணிபுரிய வேண் டும் என கஷ்டப் பிரதேச ஆசிரியர்கள் விசனங் கொள்கின்றனர். இந்த நடைமுறையை ஒழுங்குபடுத்த ஒரு புதிய நடைமுறை அவசி யம் தேவைப்படுகின்றது.

பின்தங்கிய பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் நீண்டகால மாக அங்கு தொடர்ந்து பணியாற்றுவதால் அவர் களுடைய தொழில்சார் அபிவிருத்தியையோ அல்லது கல்வித்தர நிலையையோ உயர்த்திக் கொள்ளச் சந்தர்ப்பம் மிகக்குறைவு. அங்கேயே தங்கி நின்று பணிபுரிவதால் நகர்ப்புறத் தொடர்பு குறைவாக உள்ளது. இதன் காரணமாக எதிர் காலத்தில் உயர் தகைமையை அடைவதில் பல இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியவர்க ளாக உள்ளனர்.

அதேவேளை -

கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்றுவோரில் ஆசிரியைகள் கர்ப்பகாலத்தைப் பொறுத்த வரை யில் பெருமளவு உடல், உள ரீதியில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

மேலும் குடும்ப உறவுகளைப் பேணுவதிலும், சமூகச் செயற்பாடுகளில் கலந்துகொள்ளவதி லும் அவர்களுக்கு சந்தர்ப்பம் குறைவாக உள ளது. இதனால் ஆசிரியர் உளம் வலுவாக பாதிப் படைவது தவிர்க்க முடியாததாகிறது.

இவ்வாறு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு குறிப்பாக 5 வருடங்கள் சேவை பணிபுரிந்த வர்களுக்கு-என்றாலும் இடமாற்றத்தை வழங் கும் பொழுது அங்கு பணியாற்றும் ஏனைய ஆசி ரியர்களுக்கு மனதளவில் சோர்வு ஏற்படாமல் நாமும் 5 வருட சேவையைப் பூர்த்தி செய்தால் இடமாற்றம் பெறலாம் என்ற மனநிலையை உரு வாக்கி தொழில் மீது விருப்புடனும், ஆர்வத் துடனும் செயற்பட வாய்ப்பு உண்டாகும்.

### ஒழுங்கமைந்த நடைமுறை

இடமாற்ற அமைப்பில் ஓர் ஒழுங்கமைந்த நடைமுறையைப் பேணுவதற்கு யாழ்.மாவட்டத் தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களின் கலவிப்பணிப்பாளர்களும் ஓர் அமைப்பை உரு வாக்கி, குறித்த கால அடிப்படையில் இடமாற்ற நடைமுறையை அமுல்படுத்துவது யாழ்.மாவட்ட கல்வித்தர வீழ்ச்சிக்குரிய காரணிகளில் ஒன்றை நிவர்த்தி செய்ததற்கு ஒப்பானதாகும்.

வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அரச அதி பர்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், தொழிற சங்கப் பிரதிநிதிகள், சமுர்த்தி அலுவலர்கள் இணைந்த வகையில் ஒரு பொது அமைப்பு உரு வாக்கப்பட்டு அந்த அமைப்பின் ஊடாக ஆசிரி யர்களின் விவரம் திரட்டப்பட்டு, குறிப்பிட்டகால ஒப்பந்த அடிப்படையில் கஷ்டப் பிரதேச இடமாற்ற நடைமுறையைப் பின்பற்றுதல் அவசியமாகிறது.

தீவகக்கல்வி வலயத்தைப் பொறுத்த மட் டில் யாழ்.வலயம், வலிகாம வலய ஆசிரியர் களே இடமாற்ற தகுதி உடையவர்களும் பொருத்தப்பாடுடையவர்களும் ஆவர்.

அந்தவகையில், யாழ்.வலய வலிகாம வலய கல்விப் பணிப்பாளர்கள் குறிப்பிட்ட தொகை ஆசிரியர்களை ஆண்டுதோறும் ஒழுங்கமைந்த சுற்றுப்பாதை அமைப்பில் ஆசிரியர்களை நிய மிப்பது சாதகமானதாக அமையும்.

இதனடிப்படையில் கடந்த வருட இறுதிப் பகுதியில் இரு வலயங்களின் கல்விப்பணிப் பாளர்களும் தீவக வலயத்துக்கு குறிப்பிட்ட அளவு ஆசிரியர்கள் இடமாற்றப்படுவர் என வாயளவிலும் பத்திரிகையளவிலும் அறிவித் தல்களை வழங்கி இருந்தும் இவ்வருடம் நடை முறைப்படுத்தப்படாமல் விட்டிருப்பது பெரும் ஏமாற்றத்தைக் கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கும், முன்மாதிரியான நல்ல செயற்பாடு எனக் கூறி யவர்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னைய அறிவித்தலுக்கு அமைய செயற் பாடு இடம்பெறாமை இவர்களது நியாயத் தன்மை செயற்பாட்டைக் கேள்விக்குறியாக்கி யுள்ளது.

| வலயம் | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|
| யாழ்.வலயம் | 1600 |
| வலிகாம வலயம் | 1470 |
| தீவகக் கல்வி வலயம் | 375 |
| தென்மராட்சி | 604 |
| வடமராட்சி | 943 |

(வலயக் கல்விப்பணிமனை - 2003)

மேற்காட்டப்பட்ட எண்ணிக்கையில் உள்ள ஆசிரியர்களின்படி யாழ்.வலயத்தில் இருந்து 10% ஆசிரியர்களையும், வலிகாம வலயத்தில் இருந்து 10% ஆசிரியர்களையும் அவர்களது முன்னைய கால சேவை அடிப்படையில் கஷ்டப் பிரதேசத்துக்குக் குறிப்பிட்ட காலத்துக்கு நியமித் தால் தொடர்ந்து கஷ்டப் பிரதேசத்தில் பணி யாற்றும் ஆசிரிய சமூகத்துக்கு விடுதலை கிடைக கும்.

இவற்றினைக் கருத்திற் கொண்டு போன வருட அறிவித்தலின் பிரகாரம் உடனடியாகச் செயற்படுத்தப்படுவது தீவகக் கல்வி வலய ஆசிரியர்களினதும், கல்விச் சமூகத்தினதும் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வாக அமையும். இச்செயற்பாடு உறுதித் தன்மையுடன் தொடர்ந்து இடம்பெறல் மிகவும் முக்கியமாகும்.

கஷ்டப்பிரதேசத்தில் தொடர்ந்து பணியாற் றும் ஆசிரியர்களின் நலன்கருதி யாழ்ப்பாண கல்வி வலயமும், வலிகாமக்கல்வி வலயமும் தீவகக் கல்வி வலயமும் ஒன்றிணைந்து ஒரு வரையறைக்குட்பட்ட அமைப்பின் ஊடாக இட மாற்ற நடைமுறையைச் செயற்படுத்துகின்ற போது ஆசிரியர் மத்தியில், குறிப்பாக பின்தங் கிய பிரதேசத்தில் பணியாற்றுகின்றவர்களிடம் உற்சாகமும், செயற்திறனும் புத்தூக்கமும் பெறும்.

அதனூடாக அவர்களிடம் இருந்து வினைத் திறனுள்ள வெளியீட்டை, அதாவது நீண்ட காலத்தில் பெறமுடியாததைக் குறுகிய காலத் தில் பெற்றுக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி, கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கும் ஆசிரியர்க ளுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தவிர்த்து சுமுகமான உறவைக் கட்டியெழுப்பவும் வழி ஏற்படும். ★

**வெண்கட்டியான்**

# கடலில் மீண்டும் படகுகள் விரைவதற்காக திடசங்கற்பத்துடன் உழைக்கும் பெண்கள்





சுனாமி கடற் பேரலையால் சேதமடைந்த படகுகளைத் திருத்தம் செய்வதற்கும் புதிதாக அமைப்பதற்கும் வடமராட்சி கிழக்கு தாழைய டிப பகுதியில் படகு கட்டுமான நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரனை யுடன் எம்.எம்.எஸ்.நிறுவனத்தால் வழங்கப்பட்ட படகு கட்டுமாணப் பயிற்சிகளைப் பெற்ற பெண களே இங்கு கடமைபுரிகின்றனர்.

இவர்களைச சந்தித்து உரையாட வாய்புக் கிடைத்தது. பயிற்சிக் கல்லூரியின் தொழில்நுட்ப வியலாளர் க.சாந்தியுடனான செவ்வித் தொகுப்பு இது.

★ *கேள்வி:-* படகுக்கட்டுமான பயிற்சிக் கல்லூரி யின் செயற்பாடுகள் தொடர்பாகக் கூற முடியுமா?

○ *பதில்:-* சுனாமியால் பாதிக்கப்பட்ட பிர தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டுமென்ற அவா வுடன் படகுக்கட்டுமான பயிற்சிக் கல்லூரி, தமி ழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவில், எம்.எம்.எஸ். நிறுவன நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இக் கல்லூரியில் தற்போது 20 பெண்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர். பெண்களுக்கும் தொழில் வழங்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக கப்பட்ட இக்கல்லூரியில் வடமராட்சி கிழக்குப் பகுதி யில் உள்ள பெண்கள் தான் பயிற்சியைப் பெறறு தற்போது தொழிலிலும் ஈடுபடுகிறார்கள்.

பாதிப்புக்குள்ளான பெண கள் தமது கவலைகளை மறந்து எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைப் பெற இந்த வேலையை மேற்கொண்டு வருகின்றார்கள். 27 ஆம் திகதி இதறகான பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்தோம்.

இந்தப்பகுதியில் மக்கள் சுனாமி ஆழிப்பேர லையால் பெரும்பாதிப்பைச் சந்தித்ததுடன், தமது உடமைகள், உறவுகள், தொழில் உப கரணங்களை முற்றாக இழந்து நிற்கின்றார்கள்.

அவர்கள் கடலில் சென்று தொழிலை மேற் கொள்ள படகு அவசியம். இதற்காகவே இந்த நிறுவனத்தில் இப்பகுதிப் பெண்கள் இணைந்து இந்தப் படகுகட்டும் வேலையையும் படகுதிருத் தும் வேலையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது படகுகள் திருத்தும்வேலைகள் மட்டும் நடைபெறுகின்றன. சேதமடைந்த படகு களை முழுக்க முழுக்க எமது நிறுவனத்தின் செலவில் தொழிலாளர்களுக்கு இலவசமாகச் செய்து கொடுக்கின்றோம்.

நாம் பெண்களாக இருந்தும் இந்தப் படகு திருத்தும் வேலையை வெற்றிகரமாக எதுவித பிழைகளும் இன்றி பாவனைக்குச் சிறந்தமுறை யில் திருத்தம் செய்து கொடுத்துக்கொண்டிருக் கின்றோம்.

★ *கேள்வி:-* இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்டப் பயிற் சிகளை எங்கு பெற்றீர்கள்?

○ *பதில்:-* இநதப் படகு திருத்து தல் மற்றும் கட்டுமானப்பணிவேலைகளின் ஆரம்ப பயிற்சிகளை கடற்புலிகள் வழங்கினர். ஆரம்பத்தில் 5பெணகளே பயிற்சிபெற்றனர். பின்னர் இவர்கள் ஏனைய பெண்களுக்கு படகுக் கட்டுமாணப் பயிற்சிகளை முழுமையாக வழங்கி வருகிறார்கள். தற்போது 20பெண்கள் வரை இந்தப் பயிற்சியினைப் பெற்றுவருகிறார்கள்.

★ *கேள்வி:-* பயிற்சிக் காலத்தில் பெண்களுக்கு ஊக்குவிப்புக்கொடுப்பனவுகள் வழங்கப்படு கின்றனவா?

○ *பதில்:-* ஆம், பயிற்சியாளர் ஒருவருக்கு ஒரு மாத பயிற்சி ஊக்குவிப்புப் பணமாக 3ஆயி ரம் ரூபா வழங்கப்படுகிறது. இதனைவிட உணவு வசதிகளும் தங்குமிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் 1000இற்கும் அதிகமான படகுகள சேதமடைந்துள்ளன. திருத்தம் மேற்கொள்ளக்கூடிய படகுகளை எடுத்து திருத்துகின்றோம். மக்கள் தாமாகவே முன்வந்து படகுகளை எமக்குக் கொண்டுவந்து தருகின்றார்கள். நாம் திருத்தக்கூடியபடகுகளை திருததம் செய்கின்றோம்.

இதைவிட, முல்லைத்தீவுப்பகுதியில் இப் படிப்பட்ட படகு கட்டும் பயிறசிக் கல்லூரி ஏற் கனவே ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. அங்கும் படகு கட்டுமானம் தொடர்பான வேலைகள் நடைபெறுகின்றன.

★ கேள்வி:-ஆண்களை இந்தப் பயிற்சியில் இணைத்துக் கொள்ளவில்லையா?

○ *பதில்:-* இந்தப் பயிற்சியில் முல்லைத் தீவு, மன்னார் போன்ற வேறு இடங்களில் ஆண களும் இணைந்து படகு கட்டுமான வேலைக ளில் ஈடுபட்டுள்ளனர். வடமராட்சி கிழக்கில் தற போது பெண்கள் மட்டும்தான் பயிற்சியில் ஈடு பட்டுள்ளனர். ஆண்களும் இந்தப் பயிற்சியில் இணைந்து வேலையை மேற்கொள்ளமுடியும்.

## தொழில்நுட்பவியலாளர் சாந்தி உதயனுக்கு வழங்கிய செவ்வி

இந்தப் பயிற்சியை நாம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றோம். இப்பயிற்சியில் இணை யக் கூடியவர்கள் வந்து சேரலாம். தற்போது வடமராட்சி கிழக்கில் முதலாவது பயிற்சிக் கல லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளது. வேறு இடங களிலும் இந்தப் பயிற்சிக் கல்லூரிகளை ஆரம்பிக்க வுள்ளோம்.

**செவ்விகண்டவர்**
**மு.கந்தசாமி** *பரந்தன் செய்தியாளர்*

★ *கேள்வி:-* படகு கட்டுமானத்திற்கான மூலப் பொருள்களை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?

○ *பதில்:-* தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தி னரே இதற்கான மூலப்பொருள்களை எமக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி, இத்தொழிலுக்கு அனைத்து வகையிலும் ஆதர வுகளையும் வழங்கி வருகின்றனர். ★

உ

*திருநெல்வேலி பழம் கிணற்றடி*

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்

### வருடாந்த மகோற்சவம்

கொடியேற்றம் – 23.02.2005 – புதன்கிழமை
மஞ்சம் – 04.03.2005 – வெள்ளிக்கிழமை
கையிலாயவாகனம் – 06.03.2005 ஞாயிற்றுக்கிழமை
சப்பரம் – 08.03.2005 – செவ்வாய்க்கிழமை
தேர் – 09–03–2005 – புதன்கிழமை
தீர்த்தம் – 10.03.2005 – வியாழக்கிழமை
தண்டிகை உற்சவம் – 11.03.2005 வெள்ளிக்கிழமை
வைரவர் உற்சவம் – 12.03.2005 – சனிக்கிழமை

– நிர்வாகிகள்.

*விளம்பர அன்பளிப்பு:*

**தேவி மில், தேவி தொலைத் தொடர்பு சேவை,**

(26-14-15) ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சி-41116)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிதி நிறுவனத்தின் வாகனத் தரகா

### சுப்பிரமணியம் சிவராஜா

அவர்களின் அகாலமறைவினால் துன்பமுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேர்ச்சன் பினான்ஸ் லிமிடெட்,
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(42371)(26-14-45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 02 - 04 - 1937



விண்ணில் 24 - 01 - 2005

### அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

ஒளியாக அகத்து உலாவினீரே!
விழியாக உகந்து வாழ்ந்தீரே!
வழியாக மிகுந்து உறைந்தீரே!
களியாக மனத்து நிறைந்தீரே!
அழியாத புகழோடு மறைந்தீரே!

இன்று (23-02-2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாசேரி,
வரணி வடக்கு, வரணி. (42334)(26-14-45) - குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 - 06 - 1949



உதிர்வு 01 - 03 - 1999

### அமரர் இராமகிருஷ்ணன் நாகராசா

திதி: சதுர்த்தசி

இல்லத்தின் விளக்காக இதயங்களின் துடிப்பாக
உயர்வுக்கு ஏணியாக உறவுகளின் விழுதாக
வாழ்ந்திருந்த எம் ஆருயிர் தெய்வமே அப்பா!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
தினம் தினம் உங்களை எண்ணித் தவிக்கிறோம்
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திக்கிறோம்.*

தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.
T.P.:0777 038772

"லெட்சுமி வாசம்",
88/5C, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(42372)(26-14-45) ஸ்ரீலக்சுமி ஜுவல்லறி 220A, யாழ்ப்பாணம்.

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.23

திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் இன்று புதன்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அன்று அதிகாலை 5மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நகர சங்கீர்த்தனத்துடன் நிறைவுபெறும். (ஐ)

## உளவியல் நூல் வெளியிட்டு வைப்பு

அச்சுவேலி,பெப்.23

தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் செயற்றிட்ட அதிகாரி திருமதி தி.சிதம்பரநாதன் எழுதிய "கதையும் கருவும்" உளவியல் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் தேசிய கல்வி நிறுவக வவுனியா பிராந்திய சிரேஷ்ட விரிவுரையாளர் சுவர்ணராசா தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

நூல் ஆசிரியர் திருமதி சிதம்பரநாதனுக்கு நூல்வெளியீட்டு விழாவில் 'வித்தியாமதி' என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (10-11)

## வருமானப் பரிசோதகர் கூட்டம்

சங்கானை,பெப்.23

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி வருமானப் பரிசோதகர் - மேற்பார்வையாளர் சங்கத்தின் கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் சு.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (10-29-202)

## பாடசாலை நிகழ்வுகளுக்கு செயற்பாட்டுக் குழுக்கள்

வலி.தெற்கு,பெப்.23

உடுவில் கல்விக்கோட்டத்தில் இவ்வருடம் நடைபெறவுள்ள பாடசாலை நிகழ்வுகளை நடத்துவதற்கு அதிபர்கள் தலைமையிலான செயற்பாட்டுக்குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்திலேயே இக்குழுக்கள் தெரிவு இடம்பெற்றது.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், பரீட்சைகள், சைவத்திருமுறை விழா போன்ற பல நிகழ்வுகளை நடத்துவதற்காகவே தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (10-152)

## பௌர்ணமிச் சிந்தனைகள் இன்று

'பௌர்ணமிச் சிந்தனைகள்' நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையில் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'இந்து சமய சமகாலச் செல்நெறிகள் - கோயிற் கிரியைகள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் பகோபால கிருஷ்ண ஐயரின் சொற்பொழிவும் இடம்பெறும்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை மாணவி தாரணி ரஞ்சன், யாழ் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் பாக்கியலஷ்மி நடராஜா, யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சி.மகேந்திரன் ஆகியோர் இணைந்து இசை விருந்து வழங்குவர். (10-202)

## அந்தோனியார் ஆலய உற்சவம்

கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்குத் திருப்பலிப் பூசையுடன் நிறைவுபெறும்.(10-111)

## தேவை

எமது நிறுவனத்துக்கு
* விற்பனைப் பிரதிநிதி
* கூலியாள்கள்

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
விரும்புவோர் உடன் நேரில் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 - 4590008. (42374)(26-14-45)

*மங்களகரமாக*

## மீண்டும் ஆரம்பம்

அன்புடையீர்!
1995 இடம்பெயர்வில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன் இயங்கி வந்த எமது

### கஜன் மிதிவண்டி திருத்தகம்

என்ற ஸ்தாபனத்தை இப்போது மீண்டும் சுன்னாகம் ஸ்ரேசன் றோட் பொலீஸ் நிலையம் முன்பாக இன்று (23-02-2005) புதன்கிழமை காலை 10.00 மணிக்குத் திறப்புவிழா செய்து ஆரம்பித்து வைக்கவுள்ளோம். ஆகவே, எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**கஜன் மிதிவண்டி திருத்தகம்**
பொலீஸ் நிலையம் முன்பாக,
ஸ்ரேஷன் றோட்,
சுன்னாகம்.

உரிமையாளர்:
பொ.சிவானந்தன்
[சிவம்].

(42351)(26-14-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சந்திரிகா தர்மரட்ணத்தின்
தந்தை

### அமரர் நாகமணி வல்லிபுரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

(42366)(26-14-45)

AHC

TPO

**Announcement of job opportunity**

Shantiham is a non-governmental organization in the north of Sri Lanka providing psychosocial care. Currently, Shantiham is collaborating with HNI-TPO (Amsterdam, the Netherlands), implementing a psychosocial intervention for children exposed to extreme stress both in relation to the armed conflict and recent Tsunami disaster. A similar program is being implemented in Burundi, Sudan and Indonesia.

For a scientific research study on the effectiveness of this intervention, Shantiham is looking for a Program Research Coordinator.

**Purpose of the position**
The Program Research Coordinator (PRC) will be based at Shantiham (Jaffna) for a period of 1 year, after an initial period on trial basis. The research's main aim is to contribute to the empirical knowledge on best practices for psychosocial interventions for children in armed conflict, as well as local research capacity building.

Main tasks are daily management of the research process (preparation, data collection, data entry, data analysis), recruitment and selection of the Research Assistants, as well as coordination with related partners.

**Preferred profile**
S/he is a Sri Lankan national from the same ethnic background as the research sample (Tamil), proficient in Tamil and English (both spoken and written). S/he has provable research experience in both qualitative and quantitative research methodology and has or is finalizing a Masters degree in a related discipline (e.g. Psychology, Social Sciences). We expect the applicant to share TPO's values concerning working in a multi-ethnic, gender-sensitive team.

We offer the selected applicant a leading role in an innovative study, with co-authorship (according to the international guidelines for co-authorship) of possible published scientific articles in the international literature.

Applicants are invited to send CV's with a cover letter explaining motivation for the position and an explanation of how she/he fits the preferred profile in both written communication and by e-mail to the CTP project coordinator (Dr. V. Anavarathan) and the international research coordinator. Apply on or before the February 25th 2005.

Shantiham
N.Canagarathanam
President
15, Kachcheri - Nallur Rd.
Jaffna, Sri Lanka
E-mail : psych@sltnet.lk
Tel. : 222 3338

TPO International
Wietse Tol
International Research Coordinator
E-mail: wietsetol@gmail.com

(C-41113)

# ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பு அரசுக்குரியதே!

## அதிலிருந்து அரசு விலகமுடியாதென்கிறார் டாக்டர் ஜயலத்

கொழும்பு,பெப்.23



ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வொன்றைக் காணும் பொறுப்பும், சவால்களை எதிர்நோக்கும் திடமும் ஆட்சியிலுள்ள அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பிலிருந்து அரசு விலக முடியாது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் 3 ஆண்டுகள் நிறைவையொட்டி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல ஆண்டுகளாக இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் சமாதானமான அரசியல் தீர்வொன்றை பெறுவதை நோக்காகக் கொண்டு 2002 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன.

பல இன்னல்கள், மரண அச்சுறுத்தல்கள், எண்ணற்ற அவமானங்களுக்கு முன் சமாதானத்தின் முன்னோடியாக அன்று வடக்கு - கிழக்குப் பிரதேச பொறுப்பான புனரமைப்பு, மீள் குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சின் முதலாவது சிங்கள அமைச்சராக வவுனியா அரச அதிபர் காரியாலயத்தில் வைத்து யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட சந்தர்ப்பத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

வரலாற்றிலே முதன்முறையாக உலகில் பிரபல நாடுகளின் ஒத்துழைப்பும் ஐநா. அமைப்பு, உலகவங்கி போன்றவற்றின் ஒத்துழைப்பும் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குக் கிடைத்தது.

தனியாட்சியைக் கோரி தசாப்தங்களாகப் போரிட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை முதன்முறையாக ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றிற்காக உட்பட வைத்தது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும். அதைவிட இறுதி அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதில் மனித உரிமைகள், குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு, முஸ்லிம் மக்களுக்கும் சமவுரிமையைப் பெற்றுக்கொடுத்தல், பெண் உரிமை பாதுகாத்தல், நியாயமான முறையில் சமவுரிமை, சம அந்தஸ்தை அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு இறுதித் தீர்வொன்றுடன் ஆயுதங்கள் உட்பட யுத்தச் சூழலிலிருந்து முழுமையாக விடுபட்டு, சத்தியங்களுக்குக் கட்டுப்பட்டு ஒஸ்லோ, ரோக்கியோ தீர்மானத்தின் மூலம் சர்வதேச சமூகத்தின் முன் இரு பகுதியினரும் ஒன்றுபட்டமை இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பெருவெற்றியாகும்.

2005 ஜனவரி மாதம் 25ஆம் திகதி இலங்கைக்கு நிவாரணம் வழங்கும் குழுவின் தலைவர்கள், (ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஜப்பான்) யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாத்துக்கொண்டு முன்னேறிச்செல்லுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

2002 பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை எமது நாட்டின் சமாதானத்தின் ஊற்றுவாயாகும். இது ஐக்கிய இலங்கைக்குள் இறுதி அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான அத்திபாரமாகும். சமாதான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எமக்கு இன்னும் இக்கட்டான துயரப் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் எதிர்கால சந்ததிக்காகவும் பயமின்றியும், புத்திசாலித்தனமாகவும் கைச்சாத்திட்ட உடன்படிக்கையைப் பாதுகாத்து, அந்த உடன்படிக்கையின்படி ஒஸ்லோ, ரோக்கியோ தீர்விற்கு உடனடியாக புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்து, இறுதி அரசியல் தீர்வொன்றைப் பெறுவதற்கு உண்மையாக அர்ப்பணித்துச் செயற்படும்படி நடைமுறை அரசின் கௌரவ ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தேவையற்ற அரசியல் நடைமுறைகளுக்கு உள்ளாகாது அரசியல் பதவிகள், அமைச்சர் பதவிகள் தமது அரசினைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கு இந்த உடன்படிக்கைக்கு ஏதும் தீங்கு ஏற்படுத்தாது நடக்குமாறு நடைமுறை அரசின் அரசியல்வாதிகளுக்கு நான் ஞாபகமூட்ட விரும்புகின்றேன் - என்றுள்ளது.

(8)

## பணிவிடை புரியவே வந்தேன்

**தவக்காலச் சிந்தனை**

**பதினைந்தாம் நாள்**

பதவியாசை மனிதனை அன்று தொட்டு இன்றுவரையும் ஆட்டிப்படைக்கும் அகங்காரப் பேய். ஒவ்வொரு மனிதனும் தான் தான் முன்னிலையில் நிற்க வேண்டும். தாம் தான் முதலிடம் பெறவேண்டும் என்ற அவா உள்ளவனாய் இருக்கின்றான்.

கதிரைகளுக்காய் ஒவ்வொரு நாடுகளிலும் கடும் போட்டிகள் நடக்கின்றது. ஆனால், இறைவன் யாருக்கு எந்த இடம், எந்த நிலை என்று ஏற்கனவே எழுதி வைத்துவிட்டான்.

இறைமகன், இவ்வுலகின் தொண்டனாய், பணியாளனாய் பலருடைய மீட்புக்கு விலையாய் தம் உயிரைத் தரவே வந்தார். இறைவன் அவரை மகிமைப்படுத்தினார்.

நாமும் பதவிகளையல்ல பணிகளையே விரும்புவோம். கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே. உன் வேலைக்குரிய ஊதியம் உனக்கு கிடைக்கும்.

பதவி வாழ்வல்ல! பணி வாழ்வே சிறந்தது!!

- ஜெயவதனி.

## சமநிலையில் நிறைவுற்றது சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி

குருநகர்,பெப்.23

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர்கள் நிஷாகரன், கபிலன் ஆகியோரின் அபாரத் துடுப்பாட்டத்தினால் இக்கல்லூரி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. நிஷாகரன் 152 ஓட்டங்களையும் கபிலன் 44 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி வீரர்களான மயூரன் 8 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரசாத் 9.3 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த யாழ்.மத்திய கல்லூரி அணியும் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 329 ஓட்டங்களைப் பெற்றதும் துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது.

யாழ்.மத்திய கல்லூரி வீரர்களான மகிபன் 81 ஓட்டங்களையும் சுதர்ஷன் 69 ஓட்டங்களையும் றோகன் 60 ஓட்டங்களையும் நவநீதன் 52 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி வீரர்களான நிரோஷன் 22 ஓவர்கள் பந்து வீசி 81 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் சுஜீவன் 22 ஓவர்கள் பந்து வீசி 82 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆட்ட நேர இறுதிவரை ஒரு விக்கெட் இழப்பிற்கு 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால், போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

(10-51)

## மெய்வன்மைப்போட்டி

குருநகர்,பெப்.23

யாழ்.புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். புனித ஜேம்ஸ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் ம.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ந.வரதராசா பிரதம விருந்தினராகவும், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் தலைவர் அ.அகஸ்ரின், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் உதவிப் பங்குத்தந்தை வண.பிதா ஜஸ்ரின் அடிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(10-51)

## சங்ஸ்தா கிண்ண உதைபந்தாட்டம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.23

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் 'சங்ஸ்தா' கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிக்கான தெரிவுப்போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட யாழ்மாவட்ட இணைப்பாளர் கே.இராசதுரை கேட்டுள்ளார்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முதல் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(10-190-202)

## விரைவாக அரைச்சதம் பெறும் வீரருக்கு சென்றலைற்ஸ் துடுப்பாட்ட வெற்றிக் கிண்ணம்

யாழ்ப்பணம்,பெப்.23

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையேயான துடுப்பாட்டப்போட்டிகளில் வேகமாக அரைச்சதம் அடிக்கும் வீரருக்கு சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் டானியேல் ஞானகாந்த வெற்றிக்கிண்ணம் இவ்வருடம் தொடக்கம் வழங்கவுள்ளது.

எனவே, இப்போட்டிகளில் அரைச்சதம் அடிக்கும் வீரர்களின் விவரங்களை தமது கழக முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு இக்கழகம் கோரியுள்ளது.

போட்டிக்கான புள்ளி விவரத்தாள்களை (Shore Sheeat) போட்டி நடுவர்களுடன் அதிபர் அல்லது விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் ஆகியோர் உறுதிப்படுத்தி 223, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-190)

# குடாநாட்டில் உண்ணிக் காய்ச்சல் வேகமாகப் பரவுகின்ற நிலைமை

றிக்கற்சியா (Ricketsia) எனும் ஒரு வகை நுண்ணங்கியினால் திடீரெனத் தோற்றுவிக்கப்படும் காய்ச்சலே ரைபஸ் காய்ச்சல் எனப்படுகிறது. இந்நுண்ணங்கி மூட்டுக்காலி வகையைச் சேர்ந்த அங்கிகளான தெள்ளு, உண்ணி, பேன் என்பவற்றால் மனிதனுக்குப் பரப்பப்படுகின்றது.

01.12.2004 தொடக்கம் 15.02.2005 வரையான இரண்டரை மாத காலத்தில் 117 நோயாளிகள் ரைபஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா மருத்துவசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகையால், இவ்வேளையில், இந்நோய் குறித்து மக்கள் விழிப்புணர்வாக இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

ரைபஸ் காய்ச்சலில் மூன்று பிரதான வகைகள் உள்ள போதிலும் தெள்ளினால் மனிதனுக்குக் காவப்படும் மியூறின் ரைபஸ் (Murine Typhus) எனும் வகைக் காய்ச்சலும் உண்ணியினால் காவப்படும் ஸ்கிரப் ரைபஸ் (Scrub Typhus) எனும் வகைக் காய்ச்சலுமே பெரும்பாலும் பரவி வருகின்றன. எனவே, இக்காய்ச்சலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தெள்ளு, உண்ணி என்பனவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அசன்ரோல் (Asuntol), வேற்றிக்கொல் (Bayticol), நோற்றிக்ஸ் (Notix) ஆகிய கிருமி நாசினிகளில் ஏதாவது ஒன்றை அருகிலுள்ள கால்நடை வைத்தியரின் ஆலோசனைப் படி உங்கள் கால்நடைகளிற்குப் பிரயோகிப்பதன் மூலம் உண்ணி, தெள்ளு என்பனவற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

காய்ச்சலின் நோயரும்பு காலம் 2-23 நாள்கள்

நோயின் அறிகுறிகள்:

1.சடுதியான காய்ச்சல்
2.கடுமையான தலைவலி
3.தசை மூட்டுவலி
4.மூளைத் தடுமாற்றம்
5.செங்கண் மாரி(சிலவேளைகளில்)
6.அக்குள், தொடை மேற்பகுதி, கமக்கட்டு, முதுகு ஆகிய பகுதிகளில் தோலில் கொப்பளம் அல்லது சிறுபுண் உண்டாதல்
7.நிணநீர்க்கணு வீக்கம்
8.தோலில் சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றுதல் (சிலவேளைகளில்)

இவ்வகைக்காய்சலுக்கு உரிய காலத்தில் தகுந்த சிகிச்சை எடுக்கப்படாது விட்டால் பின்வரும் நோய்நிலைமைகள் தோன்றமுடியும்.

★ இதயத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் (Myocarditis).

★ மூளையைத் தாக்குவதுடன் (Encephlitis) நோயாளி மயக்கநிலைக்குத் தள்ளப்பட முடியும்.

★ சிலவேளைகளில் இதன் தொற்று நுரையீரலிலும்கூடத் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். (Interstitial Pheumuriia)

உங்களுடைய கால்நடைகளிற்கு உண்ணித் தாக்கம் ஏற்பட்டால் உண்ணிகள் கால்நடைகளிலிருந்து அவற்றின் இரத்தம் உறுஞ்சுவதால் குருதிச்சோகை நோயைக் கால்நடைகளிற்கு விளைவிக்கலாம். மேலும் தொடர்ச்சியான உண்ணித் தாக்கத்தினால் கால்நடைகளிற்குப் பின்வரும் நோய் நிலைமைகளை நீங்கள் அவதானிக்கமுடியும்.

★ காய்ச்சல்
★ சலநிறம் (சிவப்பாகப் போதல்)
★ சிலவேளைகளில் வயிற்றோட்டமும் ஏற்பட முடியும்.
★ உண்ணிகள் கால்நடைகளிற்கு குருதிச்சோகை நோயை விளைவிப்பதனால், கால்நடையின் வயிற்றில் கருத்தங்கியிருந்தால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு.

அன்பான மக்களே!

எனவே, உங்களது மிருகங்களில் உண்ணி, தெள்ளு என்பனவற்றை நீங்கள் அவதானித்தால் அல்லது உண்ணித் தாக்கத்திற்குரிய அறிகுறிகள் அவற்றில் காணப்பட்டால் அருகிலுள்ள கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன் அதனைக் கட்டுப்படுத்துங்கள். உங்களிற்கு தொடர்ச்சியான காய்ச்சல் கடுமையான தலைவலியுடன் அக்குள் அல்லது கமக்கட்டு அல்லது தொடைமேற்பகுதியில் சிறுபுண் அல்லது தொப்பளமும் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடித் தகுந்த சிகிச்சையை உரியநேரத்தில் பெற்றுக்கொள்வதன் மூலம் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோம்.

*"நோய் வந்த பின் வருந்துவதைக் காட்டிலும் வருமுன் காப்பதே சிறந்தது."*

செல்வி கலாஜினி சுந்தரலிங்கம்
4 ஆம் வருடம் மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மங்கள வைபவங்களுக்குப் பயன்படும் முத்துமணவறை சகல பொருள்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.சிவம், இல.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (42349)

சைபிரஸ், முசந்தாஸ், குறோட்டன்ஸ், பாம்ஸ், செவ்வரத்தை, யம்புநாவல், கொடிப்பூ (மஞ்சள்) ஆகிய பூங்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (42364)

2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விரும்புவோர்: து.துஷிதரன், இல.12, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. (42361)

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் 1000 - கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0712538150 - (இரத்தினலிங்கம்). (42360)

இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் முட்டையிடும் கோழிகளும், இளம் பேட்டுக் கோழிகளும் 2 பெரிய கோழிக்கூடுகளும் சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.(42345)

## காணி விற்பனைக்கு

உரும்பிராயில் பலாலி வீதியில் 2¾ பரப்புக் காணியும் சிவன் வீதியில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர்ம ஜெயசூரியர், அரச வீதி, உரும்பிராய். T.P.: 222 6485. (42328)

சாவகச்சேரியில் இந்துக்கல்லூரியின் சுற்று வட்டத்தில் டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டக்கூடிய தென்னை வளமுள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.கமலநாதன், கந்தசுவாமி கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. T.P.: 0777 - 676593, 0776 - 745858. (சி-41095)

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் நான்கு பக்கமும் மதிலுடன் கூடிய இரண்டு பரப்பு சற்சதுரமான காணி (4½ அடி பாதை தண்ணீர் பங்குடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773202245 அல்லது 071 4078976 (42326)

நவக்கிரி, அச்சுவேலி வீதியில் நவக்கிரிச் சந்திக்கு அண்மையில் 16 பரப்பு(கிணற்றுடன் கூடிய) தோட்டக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் உகந்தது. தொடர்பு: 222 3772. (42385)

## காணி தேவை

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு மிகவும் அண்மையில் ஒருபரப்பு - ஒன்றரைப் பரப்புக் கிடைப்பட்ட காணி தேவை. தொடர்பு: 0714078976 அல்லது 0773202245 (42326)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42177)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்தம் வாடகைக்கு இருபாலாருக்கும் வழங்கப்படும் தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 0777 593722 (42296)

## திருமண சேவை

1973, கார்த்திகை நட்சத்திரம், பாவம் 21¼, B.Sc. Computer படித்தவர் லண்டனிலிருந்து வந்துள்ளார். அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 4591417.(42387)

## தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் (ஆண்கள் மட்டும்) 28.02.2005 ஆம் திகதிக்கு முன் நேரில் தொடர்புகொள்ளவும். (யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது).

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**
(C/41128)(42) T.P.: 021 222 2573.

## பிரபல தனியார் பாடசாலைக்கு...

பாலர் பாடசாலை ஆசிரியைகளும் ஆங்கில ஆசிரியைகளும் தேவை. சனிக்கிழமை 26.02.2005 அன்று காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை சகல ஆவணங்களுடனும் நேரில்வரவும்.

140, Temple Road,
Jaffna.

(42391)(42-14-45-24)

## 20.02.2005 அன்று கலை ஒளி முன்பள்ளி நிர்வாகத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 1601 |
| இரண்டாம் பரிசு | 4483 |
| மூன்றாம் பரிசு | 4000 |
| ஆறுதல் பரிசு: | |
| 1.1085 | 4.889 |
| 2.4057 | 5.35 |
| 3.4305 | |

(42390)(29-14-45-24)

## கணக்கு எழுதுவினைஞர் தேவை

கணக்குப் பகுதிக்கு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியலுடன் சித்தியடைந்த எழுதுவினைஞர் தேவை. கணனி அறிவு அவசியம். ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 26.02.2005 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக சுயவிவரங்களைத் தபாலில் அனுப்பவும். கடித உறையில் **"எழுதுவினைஞர்"** எனக் குறிப்பிடவும்.

**உதயன் மனிதவளசேவை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-41125)

## இன்றுகாலை சதுரங்கப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான வலயமட்ட சதுரங்கப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

15 வயது, 19 வயது பிரிவுகளின் ஆண், பெண் இருபாலருக்கும் இப்போட்டிகள் நடத்தப்படுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

(10-117)

## ஆ... நிகழ்வு... தொடர்

இந்து ச... விவகார அலுவல்... திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீக நிகழ்வுத் தொடர் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'கம்பன் காவியத்தில சீதைக்கு விஞ்சிய பெருமை தேடித்தந்த சந்திப்பு சீதை-அனுமான் சந்திப்பா? சீதை-இராவணன் சந்திப்பா?' என்னும தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

(10-202)

## University of Jaffna - SriLanka
## Faculty of Graduate Studies

### First Semester Examination - 2005

**Postgraduate Diploma in Public Administration 2004/05 (Batch III)**

**Postgraduate Diploma in Population Development Studies 2004/05 (Batch I)**

Applications are invited from eligible students to sit for the above Examination.

Examination entry forms could be obtained from the office of the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna. Perfected applications should be returned on or before 05.03.2005 at the Faculty of Graduate Studies.

Candidates repeating the Examination for Postgraduate Diploma in Public Administration are also requested to apply within the above date.

**Vice-Chancellor.**
21.02.2005. (C/41124)(42-14-45-24)







# NET
# NORTH EAST TELECOM
## வடகிழக்கு ரெலிகொம்

ரெலிகொம் கேபிள் கட்டுமானப் பயிற்சிநெறி
3 மாதம்
குறுகிய கால முடிவில் வேலைவாய்ப்புகளுடன் கூடிய (OSP Construction Course) ரெலிகொம் பயிற்சி நெறி
ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
பதிவுகளுக்கு முந்துங்கள்.
பயிற்சிநெறிக் கட்டணம் ரூபா 5000 மட்டுமே!

**NORTH EAST TELECOM (PVT) LTD**
No.34, SADDANATHAR ROAD,
NALLUR, JAFFNA.
T.P.: 021 222 3786

(C/41123) (24-14-45)

# பாதிப்புற்ற மாணவர் கல்வியைத் தொடர தமிழீழ மாணவர் அமைப்பு உதவி புரியும்

## பொறுப்பாளர் நளன் தெரிவிக்கிறார்

முள்ளியவளை,பெப்,23

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தமிழீழ மாணவர் அமைப்பு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது என மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் முள்ளியவளையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போது அவர் மேலும கூறியதாவது:-

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான செயற நிட்டங்களைத் தமிழீழ மாணவர் அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

பாதிப்புக்குள்ளான மாணவர்கள் தமது கல்விச் செயற்றிட்டங்களை முன்னெடுக்க பண உதவிகளை செய்துவருகிறோம். இதுவரை 14 மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வரை பண உதவி செய்திருக்கிறோம்.

பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு உதவி புரிய விரும்பும் அமைப்புகள் எமது கழகத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி புரிய முடியும் - என்றார்.

இந்நிகழ்வில் பல அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், அரசசாரா ஒன்றியத் தலைவர், சிவனடியார், முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)



வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம் விவசாயிகளுக்காக நெல்அறுவடை இயந்திரம், நெற்கதிரை சூடுமிதிக்கும் இணைந்த பொறி என்பனவற்றை அறிமுகம் செய்துள்ளது. அந்த இயந்திரத்தின் மூலம் நெல் அறுவடை செய்யப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:மு.கந்தசாமி பரந்தன் செய்தியாளர்).*

## தரம் ஒன்றுக்கான புகுமுக விழா

வட்டக்கச்சி,பெப்.23

கிளிநொச்சி, இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் தரம் ஒன்றற்கான புகுமுக விழா அண்மையில் இடம்பெற்றது.

அதிபர் ச.புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சி கல்வி வலய விஞ்ஞான பாடச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.மோகனபாலன், தமிழீழ கல்விக் கழக நடுவப் பணியகத்தைச் சேர்ந்த ப.இளவழுதி, ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தரம் 2 மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (8-405-202)

## பூநகரிப் பிரதேசத்தில்

# விளையாட்டு மைதானம் இல்லாமையால் வீரர்கள் பயிற்சி பெறமுடியாத நிலை

பூநகரி,பெப்.23

பூநகரிப் பிரதேசத்தில் பொதுவிளையாட்டு மைதானம் இல்லாததால், விளையாட்டு வீரர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பிடமும் வேண்டுகோள் விடுத்த போதும், இதுவரை எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற இருப்பதால் வேண்டிய பயிற்சிகளைப் பெற, பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என இப்பகுதி விளையாட்டு வீரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(8-403-204)

# விசுவமடு கூட்டுறவுச் சங்கத்தில் கிராமிய வங்கி திறந்துவைப்பு

விசுவமடு,பெப்.22

விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கி ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரினை விசுவமடு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் கீதாராமும், தேசியக் கொடியினை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் றூபனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கூட்டுறவுக் கொடியினை பொது முகாமையாளர் சதாநந்தன் ஏற்றி வைக்க வங்கிக் கிளையினை முல்லைத்தீவுக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தி.மு.சிவமயம் வைபவ ரீதியாக நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து வங்கிக்கிளையின் பெயர்ப் பலகையினை கூட்டுறவு உத்தியோகத்தர் திருமதி புவனேஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தார். (8-203-402)

# முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டோருக்கு முதலாவது குடியிருப்பு திறக்கப்பட்டது

கிளிநொச்சி,பெப்22

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை வீடுகள் அமைத்து குடியிருத்தும் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக முல்லைத்தீவு உண்ணாப்புலவில் அமைக்கப்பட்ட 100 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்டப்பணிப்பாளர் மு.ராமமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் லண்டன் கிளைப்பணிப்பாளர் செல்வரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் நகரப்புறத் தளபதி தினேஸ், கள்ளப்பாடுப் பகுதிக் கிராம சேவகர் சேந்தன், முல்லைத்தீவு மாவட்ட சுனாமி பேரலை அனர்த்த விசேட பணிப்பாளர் றெஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்குடியிருப்பில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், சமையல் உபகரணங்கள், உலர் உணவுப்பொருள்கள், நுளம்பு வலைகள், மண்ணெண்ணெய் அடுப்புகள் என்பனவும் ஆயிரம் ரூபா பணமும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

(3-204)

## பூநகரி - பள்ளிக்குடா வீதி புனரமைக்கப்படவில்லை

பூநகரி,பெப்.23

பூநகரி - பள்ளிக்குடா வீதி கடந்த 20 வருடங்களாகப் புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

இவ்வீதியால் பயணம் செய்யும் மக்களும், மீன் வியாபாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பள்ளிக்குடாச் சந்தியிலிருந்து 3 கிலோமீற்றர் தூரமுடைய வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதியின் திருத்த வேலைகளுக்கென கருங்கற்கள் போடப்பட்டு 6 மாத காலமாகியும் திருத்த வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-403-202)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

மல்லாவி,பெப்.23

மல்லாவி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன் கிழமை 9 மணிக்குக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி புஸ்பவதி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்திரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக இம்முறை இல்ல மெயவன்மைப் போட்டி எளிமையான முறையில் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (8-322-202)

## கலப்படம் செய்யப்பட்ட எரிபொருள் விற்பனை

பூநகரி,பெப்.23

பூநகரி, பிரதேச தனியார் எரிபொருள் நிலையங்களில் கலப்படம் செய்யப்பட்ட எரிபொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எரிபொருள்களைப் பாவனைக்குட்படுத்துவதால், வாகனங்கள் விரைவில் பழுதடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து வாகன ஓட்டிகளின் சிரமங்களைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (8-403-204)




# தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களின் உற்பத்திக்குப் போதிய வருமானம் இல்லை

## கிராஞ்சிப் பிரதேச உற்பத்தியாளர் கவலை

முழங்காவில்,பெப்.23

கிராஞ்சி பிரதேச தெங்குச் செய்கையாளர்களின் உற்பத்திக்குப் போதிய வருமானம் கிடைப்பதில்லை என உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள் உரிய விலை நிர்ணயம் இன்றி மொத்த வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

இதனால் தெங்கு உற்பத்தியாளர்கள் பெரும் நட்டத்தை அடைந்து வருகின்றனர்.

தெங்கு உற்பத்தியில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. கிராஞ்சி பிரதேச போதனாசிரியர், தெங்குச் செய்கையில் ஏற்படும் பாதிப்புகள் நோய்த் தாக்கங்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கவேணடும் எனவும் இப்பகுதி தெங்கு செய்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-323-204)

## கணக்காய்வாளர் உப அலுவலகம் மூடப்பட்டுள்ளது

புதுக்குடியிருப்பு,பெப்.23

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கணக்காய்வாளர்கள் இல்லாமையால் மாவட்டக் கணக்காய்வாளர் அலுவலகம், உப அலுவலகம் தற்போது மூடப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி அலை அனர்த்தத்தினால் அரச திணைக்களங்கள் பல அழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, இந்த மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளாகக் கணக்காய்வாளராகப் பணி, யாற்றிய ம.செல்வரத்தினம் கணக்காளர் பரீட்சையில் சித்திபெற்று, பயிற்சிபெற்று வருகின்றார். (8-353-204)

## உழவு இயந்திரங்கள் கையளிப்பு

பூநகரி,பெப்.23

கிளிநொச்சி மாவட்டப் பூநகரிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு இரண்டு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி - பூநகரிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் யோசப் பிரான்ஸிஸிடம் கடந்த 17 ஆம் திகதி மேற்படி இயந்திரங்களை கையளித்தார். (8-203-403)

## பூநகரி வாடியடியில் வைப்பகக் கிளை

பூநகரி,பெப்.23

பூநகரி வாடியடிப் பகுதியில் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து தமிழீழ வைப்பகக் கிளை ஒன்று தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகத் தமிழீழ வைப்பகத்தின் பூநகரிப் பகுதிக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வைப்பகம் தேட்டக் கணக்கு, நிலையான வைப்புக்கணக்கு, வதியாதோருக்கான தாயக ஒளி, அடகுக்கடன் வசதி ஏனைய கடன் வசதிகள், சிறுவர்களுக்கான சேமிப்பு, பொதிப் பாதுகாப்புப் பணிச் சேவை மற்றும் ஏனைய வைப்பகப் பணிகள் ஆகிய சேவைகளுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (8-203-403)



அண்மையில் ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்ற இல்லமெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பாடசாலை அதிபர் திருமதி மு.ஸ்ரீரதி, பூநகரி - முழுங்காவில் வெகுஜன ஒன்றியத் தலைவர் பொ.தங்கராசா, பூநகரிக் கோட்டக்கல்வி அதிகாரி தி.கணபதிப்பிள்ளை, பல்லவராயன்கட்டு இந்துக்கலவன் பாடசாலை உபஅதிபர் கை.ராஜேஸ்வரக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

*(ஜெயபுரம் செய்தியாளர்)*

# சமூக நெருக்கீடுகளை வெளிப்படுத்தும் 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்'

ஈழத் தமிழ் விடுதலைப் போராட்ட வரலாற்றிற்கும் அரங்கிற்கும் இடையில் நிறைந்த ஒட்டுறவு காணப்படுகிறது. சமூகவிடுதலை பற்றிப் பேசியவர்களும் வர்க்கவிடுதலை பற்றிப் பேசியவர்களும் இனவிடுதலை பற்றிப் பேசியவர்களும் அரங்கைத் தங்கள் போராட்டத்திற்கான கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பெரியார் தொடக்கம் அண்ணாத்துரை, கருணாநிதி வரை புரட்சிகரமான திராவிட முற்போக்கு சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்ல நாடக அரங்கைப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார்கள்.

நாடக அரங்கு 'மக்கள் கலை' என்ற அந்தஸ்துடன் காணப்பட்டிருக்கிறது. இன்றும் அவ்வாறே காணப்படுகின்றது எனவும் கொள்ளலாம். மக்கள் ஆசுவாசமாக ஓர் இடத்தில் கூடி ஆறுதல் பெறும் களமாகவும் நாடக மேடையேற்றக் களங்கள் காணப்பட்டிருக்கின்றன. மக்கள் தங்கள் நம்பிக்கைகளை, தாம் விரும்பும் செய்திகளை உணர்ச்சிகளை தாமே வெளிப்படுத்தி அதனூடு புதுத்தெம்பு பெற்று தம் வாழ்வை தினமும் புதுப்பித்துக் கற்றுக் கொள்வதற்காகத் தாமே அமைத்துக் கொண்ட கல்விக கூடமாக நாடக அரங்கு மக்கள் மத்தியில் காணப்பட்டிருக்கிறது. மக்களோடு இரண்டறக் கலந்து கிடந்த கலையை மக்களை அணிதிரட்ட, புதிய சிந்தனைகளை, சித்தாந்தங்களை மக்கள்மீது திணிப்பதற்கு, அரசியல் அதிகாரங்களைப் பதவிகளை கைப்பற்றுவதற்கு, விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்பட்டதாக நகர்த்திச் செல்வதற்கு உலகம் முழுவதும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் எண்பதுகளில் சமூக, அரசியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட கருக்கள் படச்சட்ட மேடை வெளிக்குள் வெளிக்காட்டப்பட்டன. இவ்வாறான சில நாடகங்கள் அரசியல், இராணுவ கெடுபிடிகளால் தீவிரம் பெற்று மக்கள் குரல்களாக மக்களிடம் சென்று ஒலித்தன.

இந்த நிலைமையில் 1996ஆம் ஆண்டுக்குப் பின் இராணுவ சிவில் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பல்கலைக்கழகத்தில் இராணுவ அடக்குமுறை பற்றிப் பேசிய நாடகங்கள் குறிப்பிடக்கூடியன. இராணுவத்தினரின் ஆசீர்வாதம் பெற்றவர்களின் உறுக்கல்களுக்கு மத்தியில் இராணுவத்தின் கொடூரம் பற்றிப் பேசுவது என்பது சாதாரண விடயமல்ல.

1999ஆம் ஆண்டுக்குப் பின் யாழ்ப்பாண நாடக அரங்கு இரண்டு பிரதான தளங்களைப் பெற்றுக் கொள்கிறது. ஒன்று என்ஜீஓ தேவைக்காக அரங்கைப் பயன்படுத்துதல், இதில் ஈடுபடுபவர்கள் தமது கலைச்சேவைக்குத் தகுந்த ஊதியத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இன்று முன்னணியில் நின்று இயங்குகின்ற அனைத்து அரங்க நிறுவனங்களும் என்.ஜீ.ஓ. அரங்கச் செயற்பாட்டங்களையே அதிகம் நம்பியிருக்கின்றன.

அடுத்தது, அரங்கை அரசியலுக்காகப் பயன்படுத்தும் போக்கும் முனைப்புப் பெற்றது. அதாவது, அரசியல் பதவிகளைப் பெறுவதற்காக அரஙகைப் பயன்படுத்துதல் முக்கியமாக அரங்கு 'நியம் அரசியல்' சித்தாந்தத்திற்கு அரங்கு ஆட்பட்டிருக்கிறது. மேற்சொன்ன இரண்டு போக்குகளிலும் 'சமூக அக்கறை' காணப்பட்டாலும் என்.ஜீ.ஓ. சித்தாந்தமும், அரசியல் சுய இலாபமுமே மேலோங்கித் தெரிகின்றன. இந்த இரண்டு செயற்பாடுகளிலும் கலைத்துவப் படைப்பாக்கம் கேள்விக்குரியதாகவே காணப்படுகின்றது.

இந்தப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டுதான் தற்போது செயல்திறன் அரங்க இயக்கத்தினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படுகின்ற தே.தேவானந்தின் 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடகத்தை நோக்க வேண்டியுள்ளது.

இந்த நாடகம் போரில் சிக்குண்டு கிடக்கின்ற பெண்ணொருத்தி பற்றிப பேசுகிறது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இடம்பெயர்ந்து மீளக் குடியேறியுள்ள இருபது கிராமங்களில் பெண்கள் நிறுவனங்களை வலுப்படுத்தும் செயல்திட்டத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன்போது இடம்பெயர்வால் துவண்டு போன பல பெண்களை, குடும்பங்களை சிதறவிட்டு தவிக்கின்ற பெண்களை, துணை இழந்து வேதனைப்படும் பெண்களை, குடும்பத்தை தலைமை தாங்கி நடத்த முற்படுகின்ற பெண்களை, குடும்பப் பாரத்தை சுமக்க முடியாது தவிக்கின்ற பெண்களைச் சந்திக்க முடிந்தது. இதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உணர்வுகள், சம்பவங்கள், விருப்பங்கள், எதிர்கால திட்டமிடல்கள் என்பவற்றை ஒன்றாகக் கோர்த்து ஒரு குவளையாக்கி ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினர். அதற்காக, நாடக அரங்கு பயன்படுத்தப்பட்டது. முதலில் ஊர்கள் தோறும் போரில் சிக்குண்டவர்களின் வாழ் நிலை பற்றிய கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிறுசிறு ஆற்றுகைகள் சிறு குழுக்களுக்கு முன் நிகழ்த்தப்பட்டன. அதில் மேலும் பல விரிவான விடயங்கள் கிடைக்கப்பட்டன. அவற்றையும் உள்வாங்கி செழுமையாக்கி நேர்த்தியான படைப்பு உருவாக்கப்பட்டு அனைத்து சமூகம் சார்ந்தவர்களின் முன்னும் வெளிப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆற்றுகையாளர்கள் அனைவரும் ஓர் இடத்தில் எட்டு நாளகள் தொடர்ச்சியாகக் கூடி நின்று இந்நாடகத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த எட்டு நாள்களில் தான் எழுத்துரு வடிவமைப்பு, இசை ஒழுங்கமைப்பு, ஒத்திகைகள், வேட உடைத்தயாரிப்பு போன்ற அனைத்தும் நடந்தேறின. நாற்பத்தி ஐந்து இளம் நடிகர்கள் இதில பங்குபற்றியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரினதும் உழைப்பு, செலவிட்ட நேரங்களை, ஒவ்வொன்றும் பயன்மிக்கதாக அமைய வேண்டுமென்று விரும்புவதால் இதில் சேகரிக்கும் நிதி முழுமையும் கள விஜயங்களின் போது இனங்காணப்பட்ட பெண தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது. இது வரையில் மூன்று இலட்சம ரூபா சேகரிக்கப்பட்டிருக்கிறது. சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து நாடகத் தயாரிப்புக்கோ நடைமுறைச் செலவிற்கோ எந்தவொரு நிதியும் பயன்படுத்தப்படவில்லை. நாடகத் தயாரிப்பிற்கு, மேடையேற்றத்திற்கு நிறுவனங்கள் உதவியிருக்கின்றன. முக்கியமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் சமாதானச் செயலணியின் சிறுதொகை நிதி வழங்கல் பிரிவு தயாரிப்பு, மேடையேற்றப் பொறுப்புக்களை ஏற்று உதவியிருக்கிறது.

சமூக அணிதிரட்டல், பிரச்சினைகளை இனங்காணல் சிறப்பான உரையாடல்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் மக்கள் சுயசிந்தனையைப் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்றிட்டங்களிற்கு 'நாடக அரங்கு' மிக நல்ல முறையில் உதவமுடியும் என்பதற்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தின் நாடக அரங்கை இணைத்த செயல்திட்டம் நல்லதொரு முன்மாதிரியாகும்.

**ராகவன்**

ஊடக அனுசரணை: உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## துயர் பகிர்கின்றோம்

அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். கிளையின் அங்கத்துவ சகோதரர்

திரு.ம.விஜயதெய்வேந்திரன்

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**மவுனகுரு பொன்னம்மா**



அவர்கள் மரணமான செய்திகேட்டு துயரமடைகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
நிர்வாகிகள், அங்கத்துவ சகோதரர்கள்,
அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

(42394)(26-14)


Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6684952 முதல் 6697001 வரை
சீட்டிழுப்பு இல. 111 திகதி 21-2-2005

வெற்றி எண்கள் 4 5 2 8 5 3 சுப்பர் எண் 15

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,92,20,475/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,92,20,475/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,057 | 500/- | 5,28,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,562 | 50/- | 5,28,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 104,680 | 10/- | 10,46,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 1,000/- | 109,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,055 | 100/- | 1,05,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,465 | 20/- | 2,09,300/- |
| மொத்தம் | 128,063 | | 52,54,800/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 52,54,800/-

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,95,14,175/-
தொடர் இல. 7644213 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 24 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6691767-8-17
6690686-2-33
6695145-0-67
6692090-4-41
6686591-8-45
6693187-3-59
6690594-5-44
6684990-6-66



## வெற்றிடங்கள்

கொழும்பில் உள்ள பிரபல பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரிவதற்குப் பின்வரும் பதவிகளுக்குத் தகுதியும் பொருத்தமும் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கணக்குப்பகுதி எழுதுவினைஞர்கள் (இருவர்)

க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் கணக்கியலுடன் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். கணக்கியல் பயில்பவர்களும் விரும்பப்படுவர். கணனி அறிவு அவசியம். அனுபவத்திற்கு ஏற்பச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

### ஒப்புநோக்குநர்கள் (மூவர்)

க.பொ.த.( உயர்தர ) பரீட்சையில் தமிழில் சிறப்பு தேர்ச்சியுடன் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு ஒருவருட காலப்பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் ஆகக்குறைந்தது ஒரு வருட மேனும் பணி செய்வதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இரண்டு பதவிகளுக்கும் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். தெரிவுசெய்யப்படுவோருக்கு கொழும்பில் தங்குமிட வசதி செய்யப்படும்.

கல்வித்தராதரச் சான்றிதழ்கள், கிராமசேவை அலுவலரின் வதிவிடச்சான்றிதழ், உறவினர் அல்லாத மதிப்புமிக்க இருவரின் நற்சான்றிதழ்களுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (25.02.2005) மு.ப. 10 மணிக்கு - யாழ்ப்பாணம், 361, கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் கேட்போர் கூடத்துக்கு நேரில் சமுகந்தரவும்.

(அ-41132)


## மரண அறிவித்தல்

# சிவசங்கரன் கணேசராசா

(புளிக் கணேஸ்)

(முன்னாள் உரிமையாளர் - திருநெல்வேலி கணேசன் களஞ்சியம்,
உரிமையாளர் - கணேசன் ரேடர்ஸ்
வெள்ளவத்தை, கொழும்பு)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கொழும்பு வெள்ளவத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவசங்கரன் கணேசராசா அவர்கள் 19.02.2005 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவசங்கரன் - காலஞ்சென்ற இராசம்மாவின் அன்பு மகனும் பிறேமகௌரியின் கணவரும் யதீஸ்வரன், ஆரணி, யதுசன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் சிவராசா (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி), காலஞ்சென்ற சிவசக்தி, சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவனேஸ்வரியின் மைத்துனரும் தேனுகன், சதுர்ஷன், தர்மீகன், பிரகானா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.02.2005 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானததுல தகனஞ்செயயபபடும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி லேன்,
திருநெல்வேலி. (42399) (24-14-26)

தகவல்:
குடும்பத்தினர்.

## சாரணர் விழாவும் ஸ்தாபகர் தினமும்

காங்கேசன்துறை சாரணர் மாவட்டக்கிளை நடத்தும் உலக சாரணர் விழாவும் சாரண ஸ்தாபகர் தினமும் இன்று காலை 9.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. மாவட்ட ஆணையாளர் அ.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், யாழ். தேசியகல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-117)

## கண்ணீர் அஞ்சலி

### சிவசங்கரன் கணேசராசா



(புளிக்கணேஸ்)
(முன்னாள் உரிமையாளர் - திருநெல்வேலி, கணேசன் களஞ்சியம் - உரிமையாளர், கணேசா ரேடர்ஸ் - கொழும்பு)

அன்னாரின் மறைவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ராசி சில்க்ஸ்,
நல்லி சில்க்ஸ்,
யாழ்ப்பாணம்.

பூலோகராஜா சசிதரன்.
(சி-41137)(26-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22
11
1974



மறைவு
24
01
2005

### செல்லையா ரஜனிகாந்த்

(சுரேன், சாங்கமன்)
(நாயன்மார்கட்டு. யாழ்ப்பாணம்)

புதுமையின் விழிப்பல்ல நீ, பழைமையின் நினைப்பு
பாசத்தின் துடிப்பு, பண்பின் சிகரமாயிருந்த நீ மறைந்து போனாய்.
இன்று உன்னைத்தொலைத்த 31ஆம் நாள்
நினைவுகள் மட்டுமே மீதமாய்
இனியும் நினைவுதரும் சுகத்துடன்
அந்தக் காலத்தை அசைமீட்டபடி மறந்திடாது எமதுள்ளம்

வினாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

உன் நினைவுடன்
செ.பூவிலிங்கம் குடும்பத்தினர்.

(34466)


## UNIT

போட்டியாளர்கள் வதந்திகளைக் கிளப்பும் வண்ணம் எங்கள் வாடிக்கையாளர்களால் வளர்ந்துள்ளோம்.

Compaq PIII கணனிகள் மொனிற்றருடன் just Rs. 31000/-முதல் 1 வருட உத்தரவாதம்

வதந்திகளை நம்பி உங்கள் பணத்தை வீணடிக்காதீர்கள்

PIV 2.4 *Complete* கணனிகள் மொனிற்றருடன் @ Colombo based price

உழைத்தோம் முன்னேறினோம்

எமது நிறுவனம் மூடுவதற்காக நாங்கள் ஆரம்பிக்கவில்லை

3 வருட பூரண உத்தரவாதம்

(சி-41131)

Once step ahead

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.


## புதுமனைப் புகுவிழா அழைப்பு

ஓம் விராட விஸ்வப் பிரம்மணே நம

நிகழும் மங்களகரமான தாரணவருடம் மாசித்திங்கள் 13 ஆம்நாள் (25.02.2005) வெள்ளிக்கிழமை மாலை 6.27 - 7.45 மணிவரையான (பழையநேரம்) உத்தர நட்சத்திரமும் சிங்க லக்கினமும், சித்தயோகமும் கூடியசுபமுகூர்த்த நல்வேளையில் எம்மால் நிர்மாணிக்கப்பட்ட

### சுவாதி இல்லம்

என்னும் புதுமனையில் குடிபுக பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள்குடும்ப சமேதராய் கலந்து சிறப்பித்து புதுமனையை ஆசீர்வதித்தருளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள்நல்வரவை விரும்பும்

திரு.திருமதி புஸ்பராசலிங்கம் (வரவேற்பாளர்)
அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி சண்முகபாலன்
(லண்டன்).

(42410)(38)

## தவறிவிட்டது

6 படங்கள் அடங்கிய பாசல் ஒன்று பெருமாள் கோயிலுக்கும் கந்தர்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் க.பொன்னம்பலம், கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு அல்லது 69, அரசடி வீதி, ஐந்தாம் ஒழுங்கை நல்லூர். 0776544571 என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(42409) *T.உதயகுமார்*

## தவறிவிட்டது

21.02.2005 திங்கட்கிழமை 5 பவுண் எடையுள்ள இரண்டு சோடிக்காப்புகள் உடுவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்-

சி.கிருபாகரன் (சுரேஸ்)
68, உடுவில் வீதி, மானிப்பாய்.
T.P.: 0776571171

(42404)

## கணனி இயக்குநர் தேவை

யாழ்நகரில் இயங்கும் யாகினி பிறிண்டிங் நிறுவனத்திற்கு Tamil, English Typing, M.S.Office, Photo Shop, Corel Draw வில் அனுபவமுள்ள பெண்கள் தேவை.

கீழ்க காணும் தொலைபேசி இலக்கத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

T.P.: 0773068983
0776027654

(42396)

## தவறிவிட்டது

செல்வி வஜினா சண்முகநாதனின் தே.அ.அ- 795662979V, மோட்டார்வாகன அனுமதிப்பத்திரம் DI No A009251034, வீ.அடையாள அட்டை ஆகியவை கைப்பையுடன் சாவகச்சேரிக்கும் கோப்பாய்க்கும் இடையில் 769வழி பேருந்தில் 21.02.2005 ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(சன்மானம் வழங்கப்படும்)

'வசந்தம்'
கண்டி வீதி, சாவகச்சேரி.

T.P.: 0777274155
(சி-41139)

## 31 ஆம் நாள் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



எமது அன்பு மகள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை பராமரித்த யாழ்.போதனா வைத்திய சாலை வைத்தியர், தாதியர், ஊழியர்களுக்கும் அவரது பிரிவால் துயறுற்றிருந்த வேளை நேரில் வருகைதந்து கணணீர் அஞ்சலி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து, தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் கூறிய, உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (23.02.2005) புதன்கிழமை நடைபெறுகின்ற அன்னாரது வீட்டுக் கிருத்திய நிகழ்வில் பங்குகொள்ளுமாறும் நினைவஞ்சலி ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு
08 - 11 - 1991

உதிர்வு
24 - 01 - 2005

### செல்வி ஐங்கரன் நிரோஷா

238, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(சி-42400)(38)

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து ஐயாத்துரை



ஆவரங்கால் கிழக்கு, மணற்பகுதி புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து ஐயாத்துரை நேற்று (22.02.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சோதிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஐ.பராபரன் (மக்கள் வங்கி முகாமையாளர்), பகவதி தம்பித்துரை (ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தம்பித்துரை (அச்சுவேலி மகாவித்தியாலய ஆசிரியர்), காலஞ்சென்ற ஜனதா - பராபரன் (கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2005)முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆவரங்கால் கிழக்கு காரைப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.* (42401)

தகவல்:
திருமதி பகவதி - தம்பித்துரை (மகள்).

### திருமதி சடாச்சரம் ஞானமணி

ஆசீர்வாதம் லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சடாச்சரம் ஞானமணி அவர்கள் நேற்று (22.02.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடாச்சரம் அவர்களின் அன்பு மனைவியும் புனிதன், இந்திரன், தேவி, சாந்தி, சந்திரன், ஆகியோரின் அன்புத் தாயாரும் வேவி, அடைக்கலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(23.02.2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நலலடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*203/10, ஆசிர்வாதம் லேன்,* (42406)
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
வாசவன் (தேவி-மகள்)

### முத்தையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வண்.வடமேற்கு ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22.02.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (42407)

*வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை.*

தகவல்:
சு.சூரியகுமார் (மகன்)

### சரவணமுத்து ஜெயரட்ணம

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து ஜெயரட்ணம் அவர்கள் நேற்று (22.02.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி சரவணமுத்து சரஸ்வதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லசிவன் - பகவதியின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் (சுவிஸ்) அன்புக் கணவரும் ஜெயாழினி, ஜெயாழன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*29/2, கடைச்சுவாமி லேன்,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (42408)

தகவல்:
பத்மநாதன்
(காந்தி - மைத்துனர்).

### திருமதி தங்கமுத்து வேலுப்பிள்ளை



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து வேலுப்பிள்ளை நேற்று (22.02.2005) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான கணபதிப்பிள்ளை-பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் மருதப்பு தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் வேலுப்பிள்ளையின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை, சின்னாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லத்துரை (பெறாமகன்) மற்றும் கமலவேணி (ஓய்வுபெற்ற மருத்துவமாது), சண்முகநாதன், மங்களேஸ்வரி, தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகலெட்சுமி, பரமேஸ்வரி, கனகரெத்தினம், வேலாயுதம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2005) புதன்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிவளவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

தகவல்:
வே.சண்முகநாதன் (கருணா- மகன்).

## விபத்தில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 23

சித்தன்கேணிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி உயிரிழந்தார் எனத் தெரிவித்து இளைஞர் ஒருவருடைய சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் - சிவரூபன் (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் இவர் கீரிமலை வீதியில் சித்தன்கேணிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## 6 கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தில் 29 கைதிகள் தப்பியோடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனையவர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதிமன்றத்தினுள் குண்டு எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது பற்றித் தீவிர விசாரணை இடம்பெற்று வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-க)

## மீண்டும் யுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கவில்லை. பதிலாக யுத்தநிறுத்த உடன்பாடும், யுத்தநிறுத்தமும் ஆபத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. வேறு உள்நோக்கம் கொண்ட தரப்புகள் மீள யுத்தத்துக்குப் போக விரும்புகின்றன.

ஆனால், யதார்த்தத்தில் நாடு ஒரு யுத்தத்தை எதிர்கொள்ளமுடியாது. யுத்தத்தினால் நாம் எல்லோருமே அழிக்கப்பட்டுவிடுவோம்.

எனவே, ஐக்கிய இலங்கைக்குள், அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரமான தீர்வை எட்டுவதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பாதுகாப்போம். யுத்தநிறுத்தத்தைப் பாதுகாப்போம்.

யுத்தநிறுத்தத்தைப் பேணவும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு என்ற ஆலோசனையை முன்னெடுக்கவும் தத்தமது வழிகளில் உதவி நல்கிய அனைவருக்கும் நான் நன்றிகூற வேண்டும்.

யுத்தநிறுத்தத்தைப் பேணுவதற்கு உதவி, இறுதித்தீர்வைக் காணும்படி எம்மைக் கோரிவரும் நோர்வே அரசு, இந்திய அரசு, ஜப்பானிய அரசு, அமெரிக்க அரசு, ஐரோப்பிய ஆணைக்குழு, ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் மற்றும் ஏனைய அனைத்து நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் ஆகிய எல்லாத் தரப்புகளுக்கும் நான் விசேடமாக நன்றி கூறவேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் நாம் அனைவரும் வாழத்தக்கதாக - நிலைத்துநிற்கும் - எல்லாச் சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதான அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு நாம் அனைவரும் உறுதி பூணுவோமாக! - என்றும் அவர் தெரிவித்தார். (த-க-190)

## நாட்டுப்பற்றாளர்களாக இருவர் கௌரவிப்பு

வந்தாறு மூலையில் கடந்த வருடம் நவம்பர் 24 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட இருவருக்கு விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

வந்தாறு மூலை சந்தை வீதியைச் சேர்ந்த சண்முகம் தயாபரன் (வயது 32) விஷ்ணு வித்தியாலய வீதியைச் சேர்ந்த சம்புநாதன் மனோகரன் (வயது 47) ஆகிய இருவருக்குமே விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் என்ற பதவி நிலையை வழங்கி கௌரவித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மேற்படி இருவரையும் அரச படைகளுடன் இணைந்து இயங்கும் ஆயுதக் குழுக்களே சுட்டுக்கொன்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## பேசுவதற்கு அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மூலம் பெறப்படும் நிரந்தரத் தீர்வொன்றுக்கான சாதகமான சூழல் இதுவரை உருவாக்கப்படவில்லை என்பதையிட்டு இலங்கை அரசு கவலை கொண்டுள்ளது.

இலங்கை அரசு, அதனைப் பொறுத்தவரையில் சொல்லிலும் செயலிலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதற்கான அதன் உறுதியான ஈடுபாட்டை வலியுறுத்துகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்வதற்காக இடைக்கால அதிகார சபையொன்றை அமைப்பது பற்றி புலிகள் இயக்கத்துடன் மீண்டும் நேரடிப் பேச்சை நடத்தவும், இனப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுக்களை மேற்கொள்ளவும் அரசு தொடர்ந்தும் தயாராகவுள்ளது.

சகல இலங்கையரும் சமாதானத்துடன், ஒற்றுமையுடன் இணைந்து வாழ்வதற்கு ஏதுவாக எமது நாட்டிலிருந்து யுத்தத்தின் துன்பத்தையும் அரசியல் வன்செயல்களையும் களைய சம்பந்தப்பட்ட சகலரும் ஒத்துழைப்பை வழங்குவர் என அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. (த)

## மீள்கட்டுமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்டமைப்பை உருவாக்குவதற் கான பேச்சுக்கள் நேர்மையாக சீராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்து வரும் வாரங்களில் அது தொடர்பான இறுதிமுடிவு எட்டப்படும் என நம்பப்படுகின்றது. எதுவாயினும் இறுதி உடன்பாடு எட்டும் முடிவு அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் கைகளிலேயே உள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு கடந்த மூன்று வருடங்களாகச் சிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உடன்பாடு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்புக்களும் உணர்ந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் பிரமுகர் கௌசல்யன் கொலை தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைமை தெரிவித்த விடயங்களை அரசின் கவனத்துக்கு நோர்வே தெரியப்படுத்தும்.

அடுத்தமாதம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஐரோப்பிய விஜயம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம் - என்றார். (த)

## புலிகள் மீது மறைமுகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச்செல்வன், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக ஒருமணி நேரம் கலந்துரையாடினார்.

அதன்பின் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

**பாதகமான செயல்களை எடுத்து விளக்கினோம்**

பேட்டி விவரம் வருமாறு:-

★ *கே:-* இன்றைய பேச்சுக்களில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன?

✪ *ப:-* தற்போதுள்ள நிலைப்பாடு தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களுடன் கலந்துரையாடினோம். அண்மைக்காலமாக நடக்கும் யுத்தநிறுத்த மீறல்கள், எமது போராளிகள் - பொறுப்பாளர்கள் கொல்லப்படும் நிலைமை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்டுள்ள இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியன தொடர்பாக விரிவாக விளக்கிக் கூறினோம்.

இவை யுத்தநிறுத்தச் சூழலைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதற்குப் பாதகமான செயல்கள் என்று எடுத்துக் கூறினோம்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்குச் சர்வதேச சமூகத்தின் உதவிகள் இங்கே திருப்பப்படவேண்டும். அவை நமது மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அதற்குப் பொதுவான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினோம்.

★ *கே:-* யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து இன்று மூன்றாண்டுகள் கடக்கின்றன. எதிர்காலத்தில் சிக்கல் ஏதுமின்றி உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுமா?

✪ *ப:-* ஒரு சிக்கலான நிலைமைக்குள் தள்ளப்பட்ட சூழல் இப்போது இருக்கின்றது.

ஆயுதப் படைகளால் நடத்தப்படுகின்ற யுத்த நிறுத்த மீறல்களின் உச்சக் கட்டமாக எமது மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும், அவரோடு போராளிகளும், மாமனிதர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வை நாம் கருதுகின்றோம்.

இக்கொலை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதுதான் இன்றைய சூழ்நிலை.

இந்த உச்ச நெருக்கடி நிலைமையை நோர்வேத் தரப்புக்குத் தெளிவாக்கினோம்.

**புதிய யோசனைகள் ஏதும் கூறவில்லை**

★ *கே:-* போர்நிறுத்தத்தை நல்ல முறையில் முன்னெடுத்துச் செல்ல ஏதாவது புதிய யோசனைகள், ஆலோசனைகள் தெரிவித்துள்ளீர்களா?

✪ *ப:-* புதிய யோசனைகள் ஒன்றும் சொல்ல வேண்டிய தேவையில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ள - ஸ்ரீலங்கா அரசு முழு அளவில் ஏற்றுக்கொண்டுள்ள - நடைமுறைகளைப் பேணினாலேயே யுத்தநிறுத்த சூழலை ஒழுங்காகப் பேணிக் கொள்ளலாம்.

எமது மக்களுக்கான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது, இராணுவ நெருக்குவாரங்களைத் தணிப்பது, மக்களின் மீள் குடியமர்வுக்கு வழி செய்வது, குறிப்பாக-இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்றுவது என்பனவெல்லாம் உடன்பாட்டில் உறுதியாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரத்துக்களை அவர்கள் நிறைவேற்றுவார்களேயானால், நிச்சயமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பேணிக்கொள்ளும் சாத்தியம் நிறையவே இருக்கின்றது.

இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை, படைத்தரப்பு புதிதாக ஆயுதக் குழுக்களை உருவாக்கி, படைத்தரப்பும் அவர்களோடு இணைந்து, விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும், தேசப்பற்றாளர்கள் மீதும், மக்கள் மீதும் ஒரு மறைமுக யுத்தத்தைத்தொடுத்துக்கொண்டிருக்கின்றதுஎன்பதுடன், இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இது தொடருமாக இருந்தால், அமைதிச் சூழல், சமாதானச் சூழல், யுத்தநிறுத்தச் சூழல் எல்லாமே தகர்தெறியப்பட்டுவிடும் என்கின்ற ஆபத்தை இன்று மிக உறுதியாக நோர்வே அனுசரணையாளர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளோம்.

**பொறுமையைப் பேணுகிறோம்**

★ *கே:-* கடந்த மூன்று வருடங்களாக ஒரே விடயங்கள் தொடர்ந்து பேசப்பட்டன.

அதைவிட எதுவும் நடக்கவில்லை. இந்த நிலையில் போர்நிறுத்தஉடன்பாட்டை எப்படி முன்னேடுத்துச் செல்லப் போகிறீர்கள்?

✪ *ப:-* விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் மிக உச்ச பொறுமையைக் கடைப்பிடிக்கின்றார்கள். எமது தலைமைப் பீடத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவோ யுத்த நிறுத்த மீறல்கள் - எவ்வளவோ எம்மைத்தீண்டும் காரியங்கள் - படுகொலை முயற்சிகள் - போன்றவற்றை எல்லாம் சந்தித்த நிலையிலும் பொறுமைகாத்து முடிந்தளவு சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கலாம் என்கின்ற முயற்சியில் முழு அர்ப்பணிப்போடு ஈடுபடுகின்றது என்பது தான் யதார்த்தம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை - மக்களைப் பொறுத்தவரை - எமது தலைமைப் பீடத்தைப் பொறுத்தவரை - நாங்கள் முடிந்தளவு அர்ப்பணிப்போடு எமது பொறுமையை உச்ச அளவில் காட்டுகின்றோம்.

தொடர்ந்தும் இந்தப் பொறுமை எவ்வளவு தூரம் தாக்குப்பிடிக்கும் என்பதை இப்போது எம்மால் சொல்ல முடியாது நடக்கின்ற சம்பவங்கள் இந்தப் பொறுமையை, அர்ப்பணிப்பை தகர்க்கும் வகையில்தான் - குலைக்கும் வயையில்தான் - அமைந்துள்ளன.

மூன்றாண்டுகள் நிறைவு பெற்றுள்ளன, யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் உடனடியாகக் கருத்தில் எடுக்கப்பட்டு அவை விரைவில் நடைமுறைப்படுத்தப்படுவதன் ஊடாகத்தான் நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் இதை நோர்வே அனுசரணையாளர்களிடம் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**யுத்த நிறுத்தம் இப்போது மிக ஆபத்தான கட்டத்தில்**

★ *கே:-* யுத்த நிறுத்த நடவடிக்கை ஆபத்தான பல கட்டங்களைத் தாண்டி நீடித்து நிற்கின்றது. இன்னமும் ஆபத்து ஏற்பட்டால்?

✪ *ப:-* ஆபத்தான கட்டங்களைத் தாண்டித் தாண்டி மிக ஆபத்தான கட்டத்துக்கு அது வந்துள்ளது என்பதை இன்று நோர்வேத் தரப்புக்கு தெரிவித்திருக்கின்றோம்.

ஏதிர்காலத்தில் இடம்பெறும் சம்பவங்களை வைத்துக் கொண்டுதான் என்ன நடக்கும் என்பதைக் கூறமுடியும்.

★ *கே:-* போர்நிறுத்த உடன்படிக்கையைச் சீராக நடைமுறைப்படுத்த சர்வதேச சமூகம் மூலம் அழுத்தம் கொடுத்தீர்கள். ஆனால், அந்த உத்தி பயன்தரவில்லை. இனிமேல் புதிய உத்திகள் எதையும் கையாளப் போகிறீர்களா?

✪ *ப:-* எமது நிலைப்பாட்டை தொடர்ந்து சர்வதேச சமூகத்துக்கு தெளிவாக்கிக் கொண்டு வருகின்றோம். இன்றைய நிலை குறித்து சர்வதேச சமூகத்துக்கு விளக்க ஏற்பாடு செய்துள்ளோம். எதிர்காலத்திலும் இப்படியான கடும் அழுத்தங்களைச் சர்வதேச சமூகத்துக்கு கொடுக்கவிருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா அரசு மறைமுகப் போரை எம்மீது திணித்துக் கொ[illegible]ருக்கும் போது தொடர்ந்தும் நாமும் நமது தலைமைப்பீடமும் நமது மக்களும் காத்துக் கொண்டிருக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையை ஆணித்தரமாகவும் உறுதியாகவும் விளக்கவேண்டிய தேவை உள்ளது அதை நாங்கள் மேற்கொள்வோம். (ஐ-க-3)


ஓம் பிராட் விஸ்வப் பிரமனே நம

**31 ஆம் நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



கடந்த 25.01.2005 செவ்வாய்க் கிழமை அன்று அமரத்துவமடைந்த எங்களின் அன்புத் தெய்வம்

அமரர் திருமதி

**நாகநந்தினி ஆனந்தகுமார்**

[illegible]ர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 23.02.2[illegible] புதன்கிழமையும், சபிண்டீகரணக் கிரியைகள் நாளை 24.02.2005 வியாழக் கிழமையும் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் இக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ப.ஆனந்தகுமார்,
'சிவனடிவாசா'
சந்தை வீதி, உடுப்பிட்டி. 060 2212640

நன்றியுடன்...
குடும்பத்தினர்.



**மழைக்குறி** (நாவல்)




பிரதி விலை
ரூபா 140 /=
கிடைக்குமிடம்
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.ச.
நெல்லியடி.



**தொடரும்? அதிரடி சலுகைகள்...**

எமது நிறுவனத்தின் அனைத்து வாடிக்கையாளருக்கும் Fuji quality Print

4R - 8.50

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**

மானிப்பாய்.
T.P.:021 222 2884

(C/41122)





**EXPOAIR** your friend in the skies...

**எக்ஸ்போ எயார்** வானத்தில் உங்கள் நண்பன்...

**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.